# கோயம்புத்தூர் மாநகராட்சி

## வரவு செலவுத் திட்டம்

## 2023 - 2024



## திருக்குறள்

ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

குறள் – 477 அதிகாரம் – 48

## விளக்கம்

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே
பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

– திருவள்ளுவர்.



முத்தமிழ் அறிஞர்

டாக்டர். **மு. கருணாநிதி** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு திரு. **கே.என். நேரு** அவர்கள்

நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும்

குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்



மாண்புமிகு திரு. **வி.செந்தில் பாலாஜி** அவர்கள்
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்



**திருமதி. கல்பனா ஆனந்தகுமார்**

மாண்புமிகு மேயர்

## முகவுரை

**வணக்கம்,**

**"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி "**

**விளக்கம்:**

நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

இயற்கை அன்னையின் வரப்பிரசாதமாக அமைந்துள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் அருகாமையில் அமைந்துள்ள கோவை மாநகரம் பொலிவும் செழுமையும் நிறைந்த ஒன்றாகும்.

கோயம்புத்தூர் நகரம் 1866 ஆம் ஆண்டு நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு, 01.05.1981ஆம் ஆண்டு மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு 34 வார்டுகளுடன் செயல்பட்டு வந்த மாநகராட்சியின் அப்போதைய பரப்பளவு 105.06 சதுர கிலோ மீட்டர் ஆக இருந்தது. அதன் மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தோராயமாக 9.30 இலட்சமாக இருந்தது.

1996ஆம் ஆண்டு முதல் 72 வார்டுகளாக மாற்றப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் இருந்து 72 வார்டுகள், 60 வார்டுகளாகவும், இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து 40 வார்டுகளாகவும் என 100 வார்டுகளாக மாற்றியமைக்கப்பட்டது. இதன் பரப்பளவு 257.04 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதன் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தோராயமாக 15.84 இலட்சமாகும். தற்போது தோராயமாக 22 இலட்சமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழ் எண் 4. நாள் 14.12.2018 ன்படி வார்டு மறுவரையறை செய்யப்பட்டது.

தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முன்னேற்றுவதற்காக இரவு பகல் பாராமல் சிந்தித்து, திராவிட மாடல் என்ற மகத்தான புதிய திட்டத்தை வடிவமைத்து அதற்கு முழுமையாக செயல்வடிவம் கொடுத்து நிறைவேற்றிவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் கோவை மாநகர மக்களின் மீதான அக்கறையினால், பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான உட்கட்டமைப்பு மற்றும் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் எண்ணங்களையும், திட்டங்களையும் முழுமையாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வழங்கி, அனைத்து வழிகளிலும் இம்மாநகராட்சிக்கு உறுதுணையாக இருந்துவரும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் **திரு. கே.என்.நேரு** அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படியும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் அதீத அக்கறையோடு பணியாற்றிவரும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் **திரு. வி.செந்தில் பாலாஜி** அவர்களின் வழிகாட்டுதலின்படியும், கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகம் வளர்ச்சி பாதையில் மிடுக்குடன் பயணித்து வருகின்றது.

கோயம்புத்தூர் மாநகரத்தின் எல்லைக்குள்ளாக இயற்கையாக அமைந்துள்ள கிருஷ்ணம்பதி குளம், செல்வம்பதி குளம், முத்தண்ணன்குளம், பெரியகுளம், நரசம்மபதி குளம், செல்வ சிந்தாமணி குளம், வாலாங்குளம், சிங்காநல்லூர் குளம் என 8 குளங்கள் கோயம்புத்தூர் மாநகரின் பொலிவிற்கு கூடுதல் அழகைச் சேர்க்கின்றன. பறவைகள், விலங்குகள், ஊர்வன, நிலநீர் வாழிகள், மீன்கள் எனப் பல்லுயிர் ஓம்பலுக்கு, நகரமைப்பின் ஆதாரமாக இந்த நீரிடங்கள் அமைகின்றன.

தமிழ்நாடு அரசின் சீரிய வழிகாட்டுதலின்படி இக்குளங்களில் இயற்கைத் தன்மையை மாற்றாமல் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் காரணமாக, மாநகரின் மக்களுக்கு மிகச் சிறந்த பொழுதுபோக்கு இடங்களாக திகழ்கின்றன.

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம் உள்ளிட்ட உலகின் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்கள், பள்ளிகள் அமையப்பெற்றுள்ளது மாநகரத்தின் பெருமைகளுள் ஒன்றாகும்.

**தென்னிந்தியாவின் மான்செஸ்டர்** எனும் பெருமை பெற்றுள்ள கோயம்புத்தூர், பலதுறைகளைச் சார்ந்த சிறு, குறு பெரும் தொழிலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற வேலைவாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்களை தன்னகத்தே கொண்டுள்ளது, இம்மாநகருக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் அம்சமாகும்.

கல்வி நிறுவனங்களில் உருவாக்கப்படும் பொறியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பிற தனித்திறன் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தும் விதமாக பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பொறியியல், தொழில்நுட்ப மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் செயல்படுவது மாநகர மக்களின் பொருளாதார வாழ்க்கையை பெரிதும் உயர்த்தி வருகிறது.

மிகக்குறுகிய காலகட்டத்தில் அபரிமிதமான முறையில் பல்வேறு துறைகளில் வளர்ச்சியைக் கண்டுள்ள இம்மாநகரத்தின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், பொது சுகாதாரம், மாசற்ற சுற்றுப்புறம், கழிவு மேலாண்மை, உட்கட்டமைப்புகளான சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, பாதாளச் சாக்கடை வசதி, தெருவிளக்கு வசதி ஆகியவற்றை இம்மாநகர மக்களுக்கு வழங்கி செயல்படுத்துவதில் மாநகர நிர்வாகம் வெற்றி கண்டுள்ளது.

மேலும், வேகமாக நகரமயமாகும் வழியில் பயணிக்கும் கோயம்புத்தூர் மாநகரத்தின் மக்களின் அடிப்படைத் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்திட வரும் நிதியாண்டில் நல்ல பல திட்டங்களை செயல்படுத்திட இந்த நிதிநிலை அறிக்கையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அன்புடன்

A. Kalp

**திருமதி. கல்பனா ஆனந்தகுமார்**

மாண்புமிகு மேயர்



**திரு. மு. பிரதாப், இ.ஆ.ப.,**
ஆணையாளர்

## முகவுரை

**வணக்கம்,**

**“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.”**

என்ற வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றின்படி, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து, அத்திட்டங்களை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் செம்மையுற செயலாக்கம் செய்ய அனைத்து வகையிலும் ஆக்கமும், ஊக்கமும் தந்து, அறிவிப்புகளின்படியே திட்டங்கள் மக்களைச் சென்றடைகின்றனவா ? என்பதை எல்லா வகையிலும் உறுதிப்படுத்தும் விதமாக அரசு இயந்திரத்தின் செயல்பாடுகளை கண்காணித்தும், உரிய ஆலோசனைகளை தந்தும், தமிழ்நாட்டை இந்திய மாநிலங்களிலேயே வளர்ச்சியடைந்த மாநிலமாக உருவாக்க அயராது பணியாற்றிவரும் மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சீரிய தலைமையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் **திரு. கே.என்.நேரு** அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் **திரு. வி.செந்தில் பாலாஜி** அவர்களின் வழிகாட்டுதலின் படியும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான கடந்த நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற மனநிறைவோடு **2023–24** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிவதில் பேருவகை அடைகிறேன்.

**“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு”**

என்ற உலகப் பொதுமறையின்படி, மாநகராட்சியின் வருவாயினைப் பெருக்க **2022–23** ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, தொழில் உரிமக் கட்டணம், சொத்துவரி, காலியிட வரி, குத்தகை தொகை மற்றும் குடிநீர் வரி என அனைத்து வருவாய் இனங்களிலும் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டு மாநகராட்சியின் வருவாய் அதிகரிக்கப்பட்ட அதே வேளையில், செலவினம் குறைக்கப்பட்டும், மாநகராட்சியின் நிதிநிலை ஆரோக்கியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிற்கான **2023–24** ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்டத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உன்னத நோக்கத்தில், மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புகளான **மெட்ரோ ரயில் திட்டம், எழில்மிகு கோவை மற்றும் செம்மொழிப் பூங்கா** அமைத்தல் ஆகிய வளர்ச்சித் திட்டங்களை இம்மாநகராட்சிக்கு தந்துள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்கி, அத்திட்டங்களுடன் மாநகர மக்களுக்கு பயன்படும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் விதமாக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கோவை மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், சாலைகள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இவ்வாண்டு மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டது. பல ஆண்டுகளாக செப்பனிடப்படாத சாலைகள் இந்த ஆண்டு போடப்பட்டது, இயங்காமல் இருந்த நுண் உரமாக்கும் மையங்கள், ஆகியவை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன என்பது கூடுதல் சிறப்புகளாகும்.

புதிய வணிக வளாகங்கள் கட்டி பயன்பாட்டிற்கு கொண்டு வருவதன் மூலம் மாநகராட்சியின் வருவாயை பெருக்குதல், போக்குவரத்து மேலாண்மை மூலம் மாநகரத்திற்குள் வாகனப் போக்குவரத்தை எளிமையாக்குதல், பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டக் குழாயை மாற்றியமைத்தல் மற்றும் குடிநீர் திட்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் மூலம் துரித நகரமயமாக்குதல் காரணமாக மக்கள் தொகையில் அசுர வளர்ச்சி கண்டுவரும் மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், பிற மாநில மற்றும் மாவட்டங்களிலிருந்து இம்மாநகருக்கு வந்துபோகும் மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய திட்டமிடுதல், சாலை மேம்பாட்டுப் பணிகள் மூலம் மாநகர சாலைகளை போக்குவரத்திற்கு உகந்த வகையில் மாற்றியமைத்தல், சீர்மிகு நகர திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்படும் குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் திரவக் கழிவு மேலாண்மையை செயல்படுத்துவதன் மூலம், அங்கு தேக்கிவைக்கப்பட்டிருக்கும் தண்ணீரினை மாசு இன்றி பாதுகாக்கும் திட்டம், மற்றும் அறிவியல் பூங்கா அமைத்து மாணவச் செல்வங்களிடையே அறிவியல் மனநிலையை உருவாக்குதல் சிறப்பு வாய்ந்ததாகும்.

கடந்த 5 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்மிகு திட்டப் பணிகள் இவ்வாண்டு இறுதி நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் பாராளுமன்ற நிலைக்குழு கோவை மாநகராட்சியின் சீர்மிகு திட்டங்களான குளங்கள் மேம்பாடு, மாதிரி சாலைகள் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டு என பாராட்டு தெரிவித்தது. இப்பெருமையினை கோவை மாநகர மக்களுக்கு உரித்தாக்குகிறேன்.

இம்மாநகரத்தின் சிறப்பாக நான் நினைப்பது இங்கிருக்கும் மக்கள் தான். மிக துடிப்பான, அரசு சாரா அமைப்புகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் அரசுடன் கைகோர்த்து பல நன்மைகளை இம்மாநகருக்கு செய்த வண்ணம் உள்ளது. இது அரசின் கரங்களை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது. இது மென்மேலும் தொடரும்

என்பதில் ஐயமில்லை என்றாலும், இதனை பதிவு செய்வது எனது கடமை மற்றும் பொறுப்பு என கருதுகிறேன்.

**“எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு”**

என்ற குறளுக்கு ஏற்ப இந்த உலகம் எதை விரும்பி நடக்கிறதோ, அதற்கு பொருந்திய வகையில் நாமும் நடப்பது தான் அறிவு என்பது போல இம்மாநகரமும், இங்குள்ள மக்களும் எதை விரும்புகின்றார்களோ, அதை செய்வது மாநகராட்சியின் கடமை எனக் கருதி இம்மாநகர நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலேயே இரண்டாவது பெரிய மாநகராட்சியான கோயம்புத்தூர் மாநகராட்சி ஏற்கனவே, பல்வேறு துறைகளில் சிறப்புற்று விளங்கி தமிழகத்திற்கு பெருமை சேர்த்து வருகிறது. மேலும், மாறிவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்குத் தக்கவாறு இம்மாநகரம் தன்னைத்தானே தயார்படுத்தி மேன்மை படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், இந்த வரவு செலவுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களினால் இம்மாநகரம் மேலும் வளர்ச்சிப் பாதையை நோக்கி மிடுக்கோடு பயணித்து நீடித்த நிலையான வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்

**மு. பிரதாப், இ.ஆ.ப.,**

ஆணையாளர்

| வ எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| I | **ஒட்டுமொத்த நிதி நிலைமை** | 3 |
| II | **வருவாய் பிரிவு** | 4 |
| | (i) வருவாய் மேம்பாடு | 4 |
| | புதிய திட்டங்கள் | 6 |
| | (i) QR Code மூலம் வரி வசூல் செய்தல் | 6 |
| | (ii) டிஜிட்டல் முறையில் சொத்துவரி இனங்கள் சரிபார்த்தல் | 7 |
| | (iii) வரிவசூல் மையம் மேம்பாடு | 7 |
| | (iv) புதிய வணிக வளாகங்கள் | 8 |
| III | **பொறியியல் பிரிவு** | 10 |
| | (i) குடிநீர் விநியோகம் | 10 |
| | அ. பாரதி பூங்கா பகுதியில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவு பிரதான நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் | 11 |
| | ஆ. நவீன அளவுமானிகள் | 12 |
| | இ. பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டக் குழாயை மாற்றி அமைத்தல் | 13 |
| | ஈ. பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் | 13 |
| | உ. அம்ரூத் திட்டம் – 24 மணி நேர குடிநீர் திட்டம் | 14 |
| | ஊ. இணைக்கப்பட்ட பகுதிகளில் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மற்றும் அபிவிருத்தி பணிகள் | 15 |
| | (ii) நீர்மேலாண்மை | 16 |
| | அ. ஸ்பாஞ்ச் பூங்கா | 16 |
| | ஆ. செரிவூட்டப்படும் ஆழ்குழாய் கிணறுகள் | 17 |
| | இ. மழைநீர் சேமிப்பு தொட்டிகள் | 17 |
| | ஈ. மழைநீர் வடிகால்கள் அமைத்தல் | 17 |
| | (iii) சாலை மேம்பாட்டு பணிகள் | 18 |
| | அ. தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டுத் திட்டம் | 19 |
| | ஆ. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் | 19 |
| | இ. நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் | 20 |
| | ஈ. மாநில நிதிக் குழு சிறப்பு நிதி | 20 |
| | (iv) உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டம் | 21 |
| | (v) தெருவிளக்கு அமைத்தல் | 21 |

| வ எண் | | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | (vi) | நமக்கு நாமே திட்டம் | 22 |
| | (vii) | அறிவியல் பூங்கா | 23 |
| | (viii) | நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் | 23 |
| | (ix) | சந்தை வளாகம் | 24 |
| | (x) | ஆய்வு மாளிகை | 24 |
| | (xi) | அலுவலக கட்டிடங்கள் | 25 |
| | (xii) | விளையாட்டு மைதானம் | 25 |
| | (xiii) | உள்விளையாட்டு அரங்கங்கள் புதுப்பித்தல் | 25 |
| | (xiv) | மடிக்கணினி வழங்குதல் | 26 |
| | (xv) | மிதவை சூரிய சக்தி மின்கலன் திட்டம் | 26 |
| | (xvi) | மயானங்கள் மேம்பாடு | 26 |
| | (xvii) | வாலாங்குளம் வெள்ளநீர் வடிகால் | 27 |
| | (xviii) | செங்குளம் | 27 |
| **IV** | **பாதாள சாக்கடைத் திட்டம்** | | **28** |
| | (i) | குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் | 28 |
| | (ii) | வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் | 28 |
| | (iii) | வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் | 29 |
| | (iv) | விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் | 29 |
| **V** | **போக்குவரத்து மேலாண்மை** | | **31** |
| | (i) | நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் | 31 |
| | (ii) | விபத்து நிகழும் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் | 32 |
| | (iii) | நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிறுத்தங்கள் | 32 |
| | (iv) | மேம்பாலங்களில் திரைகளுடன் கூடிய நவீன வேகக்கட்டுபாட்டு கருவி அமைத்தல் | 32 |
| | (v) | பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கண்காணிப்புக் கேமராக்கள்பொருத்துதல் | 33 |
| | (vi) | மோட்டார்அல்லாதபோக்குவரத்து | 33 |
| | (vii) | சாலை சந்திப்பு மேம்பாடு | 34 |
| | (viii) | வரிக்கடவை மற்றும் வழிகாட்டு பலகைகள் அமைத்தல் | 34 |

| வ எண் | | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | (ix) | பெயர் பலகை அமைத்தல் | 35 |
| | (x) | ரேடியல் சாலைகள் | 35 |
| | (xi) | மின்னணு சார்ஜிங் நிலையங்கள் | 36 |
| | (xii) | வாகன நிறுத்த மேலாண்மைக் கொள்கை | 36 |
| VI | | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 37 |
| | (i) | தூய்மை பணிகள் | 37 |
| | (ii) | குப்பைக் கொள்கலன்கள் | 37 |
| | (iii) | 15 வது நிதிக்குழு மற்றும் தூய்மை பாரத திட்டம் 2.0 | 38 |
| | (iv) | திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் இல்லாத மாநகராட்சி | 40 |
| | | அ. தனிநபர் வீட்டு கழிப்பிடம் | 40 |
| | | ஆ. சமுதாயம் மற்றும் பொதுகழிப்பிடங்கள் | 41 |
| | | இ. தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் | 41 |
| | (v) | தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் (SBM 2.0) வாகனங்கள் | 41 |
| | (vi) | உயர் அழுத்த கழிவறை சுத்தம் செய்யும் இயந்திரம் | 43 |
| | (vii) | பிளாஸ்டிக் அரவை இயந்திரம் | 43 |
| | (viii) | மீண்டும் மஞ்சப்பை | 43 |
| VII | | கோயம்புத்தூர் சீர்மிகு நகரத் திட்டம் | 45 |
| | (i) | தற்போது நடைபெற்று வரும் பணிகள் | 46 |
| | (ii) | சீர்மிகு நகரத் திட்ட குளங்களில் திரவ கழிவு மேலாண்மை பணிகள் | 48 |
| | (iii) | நூலகம் மற்றும் அறிவுசார் மையம் | 48 |
| VIII | | நகரமைப்புப் பிரிவு | 49 |
| | (i) | செம்மொழி பூங்கா | 49 |
| | (ii) | நகர பசுமை மயமாக்குதல் | 50 |
| | (iii) | நகர் அழகுபடுத்துதல் | 50 |
| | (iv) | தீவுத்திடல் அமைத்தல் | 51 |
| | (v) | பொது ஒதுக்கீடு இடங்களை வேலி அமைத்துப் பாதுகாத்தல் | 51 |
| | (vi) | செயற்கை கோள் மூலமாக புவியியல் நிலக்குறியீடு செய்தல் | 52 |
| | (vii) | திட்டச்சாலை | 52 |
| | (viii) | பனை வளர்ப்பு திட்டம் | 53 |
| | (ix) | வண்ணத்துப் பூச்சி பூங்கா | 53 |

| வ எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| IX | **பொது சுகாதார பிரிவு** | | 54 |
| | (i) | கூடுதல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 54 |
| | (ii) | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் பணியாளர்கள் | 55 |
| | (iii) | நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் | 55 |
| | (iv) | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்பாடு | 56 |
| | (v) | சமுதாய நகர்நல மையம் | 56 |
| | (vi) | மக்களைத்தேடி மருத்துவம் | 57 |
| | | **புதிய திட்டங்கள்** | 58 |
| | (i) | சாலையோர வியாபாரிகள் | 59 |
| | (ii) | தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி மையம் | 59 |
| | (iii) | வீடற்றோர் தங்கும் விடுதி | 60 |
| | (iv) | மனமகிழ் மன்றம் | 60 |
| | (v) | பறவைகள் பூங்கா | 61 |
| | (vi) | நகரும் கழிப்பறை | 61 |
| | (vii) | நம்பிக்கைப் பூங்கா | 62 |
| X | **கல்வி பிரிவு** | | 63 |
| | (i) | மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் | 64 |
| | (ii) | மாதிரிப் பள்ளி | 65 |
| | (iii) | பள்ளிகளில் உட்கட்டமைப்பு பணிகள் | 65 |
| | (iv) | மாநகராட்சிப் பள்ளிகளில் சிறப்புத்திட்டங்கள் | 66 |
| | புதிய திட்டங்கள் | | 67 |
| | (i) | மெய்நிகர் தொழில் நுட்பம் | 67 |
| | (ii) | உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் | 67 |
| | (iii) | ஸ்மார்ட் வகுப்பறை | 68 |
| | (iv) | மாநகராட்சி பள்ளிகளில் குழுக்கள் | 68 |
| | (v) | பள்ளி மாணவ மாணவியர்களின் இடையிலான போட்டிகள் | 68 |
| | (vi) | அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் | 69 |
| | (vii) | விளையாட்டுத் திறன் மேம்பாடு | 69 |
| | (viii) | காய்கறித் தோட்டம் | 70 |

| வ எண் | | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | (ix) | பள்ளிகளில் பாதுகாப்பு | 70 |
| | (x) | பாதுகாக்கப்பட்ட குடிநீர் | 71 |
| | (xi) | மக்களைத் தேடி நூலகம் | 71 |
| | (xii) | கணித பூங்கா | 72 |
| | (xiii) | பள்ளிகளுக்கு புதிய மேஜை மற்றும் நாற்காலிகள் வாங்குதல் | 73 |
| | (xiv) | கூடுதல் பள்ளிக்கட்டிடங்கள் | 73 |
| | (xv) | புதிய கணினிகள் | 73 |
| | (xvi) | நாப்கின் எரியூட்டும் இயந்திரங்கள் | 74 |
| | (xvii) | அங்கன்வாடி புதுப்பித்தல் | 74 |
| | (xviii) | 100 விழுக்காடு மதிப்பெண் | 74 |
| | (xix) | சிறப்பான ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை | 75 |
| **XI** | மாமன்றப் பிரிவு | | 76 |
| | (i) | மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டுத் திட்டம் | 76 |
| | (ii) | தானியங்கி குறிப்பெடுத்தல் கருவி | 76 |
| | (iii) | மாமன்ற உறுப்பினர் விருது | 76 |
| | (iv) | மாமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி | 77 |
| | (v) | மாண்புமிகு மேயர் விருப்ப நிதி | 77 |
| **XII** | பொது பிரிவு | | 78 |
| | (i) | மனிதவள மேம்பாடு | 78 |
| | | அ. மாநகராட்சி பணியாளர்களுக்கான பயிற்சி | 78 |
| | | ஆ. பணியாளர் நலன் சார்ந்த செலவினம் | 78 |
| | | இ. குளிர்சாதன வசதியுடன் கூட்டரங்கம் | 79 |
| | | ஈ. ஓய்வூதியதாரர் நலன் | 79 |
| | (ii) | விருதுகள் | 80 |

## முன்னுரை

கண்கவர் இயற்கை எழில், நாவினிக்கும் சிறுவாணி, செவி மகிழும் கொங்கு தமிழ், வயிறு குளிரும் விருந்தோம்பல், இதழ் உதிர்க்கும் சொல்லெல்லாம் இன்னல் நீக்கும்... அப்பப்பா கோவைக்குப் பெருமை சேர்க்கும் எண்ணற்ற செய்திகள் இருக்க, கோயம்புத்தூர் மாநகராட்சியின் திட்டங்களோ வாழும் மக்களுக்கு நல்விருந்தாய் அமைகிறது.

**“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்”**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப மக்கள் பணி செய்யும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின்** வழி நின்று பணி செய்யும் கோயம்புத்தூர் மாநகராட்சி மக்கள் நலம் நாடி பல்வேறு திட்டங்களை முன்மொழிகிறது.

சென்ற 2022 – 23 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் திட்டமிடப்பட்டவற்றுள் மக்களுக்காக சென்று சேரப்பட்ட செயல்களும் குறைகளைய வேண்டிய செயல்களும் பகுத்தாரயப்பட்டு இந்த 2023 – 24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமானது வகுக்கப்பட்டுள்ளது.

எங்கோ ஒரு ஊரில் வாழும் மக்கள் கூட கோவையில் வாங்க! உக்காருங்க! தண்ணீர் இந்தாங்க! கொஞ்சம் சாப்பிடுங்க! என்னும் உபசரிப்பில் மகிழ்ந்து கோவையை நாடிவர தேவைக்கேற்ப குடிநீரும், மக்களின் பாத சுவடுகளுக்கு பக்குவமான சாலைகளும், அறிவுச்சுரங்கமாம் நூலகத்திற்கு நூல்களும், இருள் விலக்கித்தோன்றும் கதிரவனுக்கு இணையான தெருவிளக்குகளும். நோயற்ற வாழ்விற்கான சுகாதாரத் திட்டங்களும், பச்சை வண்ண பட்டு உடை தரித்த பாவையாம் இயற்கை அன்னைக்கு மேலும் அழகு சேர்க்க பூங்காக்களும், உரிமை கோரும் மக்களின் கடமையான வரிகளை செலுத்த கூடுதல் வரி வசூல் மையங்கள் அமைத்தலும் தூய்மைப்

பணியாளர்களுக்கான தேவைகள், மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு சுழலும் கடிகார முள்ளாய் கால்கள் ஓயாது பணியாற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கு விருது உள்ளிட்ட பல்வேறு சிறப்புத்திட்டங்கள் இந்நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

அரசின் வழிகாட்டுதல், மக்கள் தேவைகள், அதிகாரிகளில் பொறுப்புணர்வு, பணியாளர்களின் பணித்தன்மை என அனைத்தும் ஒன்றிணைந்து கோயம்புத்தூர் மாநகராட்சி என்னும் தேரை வடம்பிடித்து மக்கள் மனதில் நிறுத்துவதே இவ்வரவு செலவு திட்டத்தின் அடிப்படை நோக்கமாகக் கொண்டு திட்டங்கள் அனைத்தும் முன்மொழியப்பட்டுள்ளது.

## I. ஒட்டுமொத்த நிதி நிலைமை

2023 – 24ம் நிதியாண்டில் வருவாய் வரவினம் மற்றும் மூலதன வரவினம் மொத்தம் ரூ.3018.90 கோடி எனவும், வருவாய் செலவினம் மற்றும் மூலதன செலவினம் மொத்தம் ரூ.3029.07 கோடி எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 2023 – 24ம் நிதியாண்டில் நிகரப் பற்றாக்குறை ரூ.10.17 கோடி ஆகும்.

### பொதுநிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

ரூ. கோடியில்

| விபரம் | பொது நிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்பக் கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வருவாய் வரவினம் | 820.68 | 370.62 | 87.51 | **1,278.81** |
| மூலதன வரவினம் | 612.22 | 1,127.87 | 0.00 | **1,740.09** |
| **மொத்தம்** | **1,432.90** | **1,498.49** | **87.51** | **3,018.90** |
| வருவாய் செலவினம் | 701.61 | 271.86 | 16.35 | **989.82** |
| மூலதன செலவினம் | 733.66 | 1,277.59 | 28.00 | **2,039.25** |
| **மொத்தம்** | **1,435.27** | **1,549.45** | **44.35** | **3,029.07** |
| உபரி / (பற்றாக்குறை) | **(2.37)** | **(50.96)** | **43.16** | **(10.17)** |






# கோயம்புத்தூர் மாநகராட்சி
# 2023–24 ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம்

## II. வருவாய் பிரிவு

### (i) வருவாய் மேம்பாடு

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பொதுமக்கள் செலுத்தவேண்டிய சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, குடிநீர்க் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவற்றை வசூலிக்கத் தீவிர வரிவசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 21.01.2023 முதல் வரிவசூல் குறைவாக உள்ள வார்டு பகுதிகளில், வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 498 சிறப்பு வரிவசூல் முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பேரில் மொத்தம் ரூ. 542.33 கோடி வசூலிக்கப்பட்டது. இதன் மூலம் சொத்துவரி வசூலில் கோயம்புத்தூர் மாநகராட்சி தமிழகத்திலேயே முதல் இடத்தினைப் பெறக் காரணமாக இருந்த கோயம்புத்தூர் மாநகர மக்களுக்கு மாநகராட்சி நிர்வாகம் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

சொத்துவரி சீராய்வின் பொழுது ஏப்ரல் 2022 முதல் ஆகஸ்ட் 2022 முடிய களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. களஆய்வில், சொத்துவரி விதிப்பு செய்யப்படாத கட்டிடங்கள், சொத்துவரி விதிப்பிற்குப் பின்னர் கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் பயன்பாடு மாற்றம் செய்யப்பட்ட கட்டிடங்கள் என மொத்தம் 14,487 கட்டிடங்கள் கண்டறியப்பட்டது.

சொத்துவரி விதிப்பு செய்யப்படாமல் விடுபட்டுள்ள 6,451 கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டதன் மூலம் ரூ.8.29 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொடர் நடவடிக்கைகளின் மூலம் இந்நிதியாண்டில் ரூ.5.00 கோடி கூடுதலாக வருவாய் கிடைக்கப் பெறும்.

சொத்துவரி விதிப்பிற்குப் பின்னர் கூடுதலாக கட்டப்பட்ட 2,304 கட்டிடங்களில் நாளது தேதிவரை 2013 கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டதன் மூலம் ரூ.3.56 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொடர் நடவடிக்கைகளின் மூலம் இந்நிதியாண்டில் ரூ.5.00 கோடி வருவாய் கூடுதலாகக் கிடைக்கப்பெறும்.

குடியிருப்பு முறையிலிருந்து வணிக உபயோகத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட 3,179 கட்டிடங்களில் நாளது தேதிவரை 460 கட்டிடங்களுக்கு சொத்துவரி வணிக உபயோகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதன் மூலம் ரூ.73 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொடர் நடவடிக்கைகளின் மூலம் இந்நிதியாண்டில் ரூ.9.00 கோடி வருவாய் கூடுதலாகக் கிடைக்கப்பெறும்.

மேலும், கட்டிடங்களை மறு அளவீடு செய்து கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிடங்களை கண்டறிந்த வகையில் நாளது தேதிவரை ரூ.1.65 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

## புதிய திட்டங்கள்

### (i) QR Code மூலம் வரிவசூல் செய்தல்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"



என்ற குறளின்படி "பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும் வந்த பொருளை சேர்த்தலும், காத்தலும் காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்" என்பதற்கு இணங்க, கோயம்புத்தூர் மாநகராட்சியின் 5 மண்டல அலுவலகங்களில் தலா ஒரு வரிவசூல் மையமும், வார்டு பகுதிகளில் 22 வரிவசூல் மையங்களும் ஆக மொத்தம் 29 வரிவசூல் மையங்கள் மூலம் **ரொக்கம், காசோலை, வங்கி வரைவோலை, கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு** ஆகிய முறைகளிலும் மற்றும் **ஸ்வைப் இயந்திரம், நெட் பேங்கிங்** போன்றவைகளின் மூலம் **tnurbanepay.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாகவும் சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, குடிநீர் இணைப்பு கட்டணங்கள், பாதாள சாக்கடைக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு, வரிசெலுத்துவதில் மேலும் கூடுதல் வசதிகள் அளிக்கும் பொருட்டு, கைபேசி **QR Code, ஸ்கேனிங், கூகுள் பே, போன் பே** முதலிய செயலிகள் மூலம் வரிவசூல் பணிகள் செய்வதற்கு உரிய தொழில்நுட்பப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ii) டிஜிட்டல் முறையில் சொத்துவரி இனங்கள் சரிபார்த்தல்

சொத்துவரியில் கூடுதல் கட்டிடங்கள், வரிவிதிப்பு செய்யப்படாத கட்டிடங்கள் மற்றும் பயன்பாடு மாற்றம் செய்யப்பட்ட கட்டிடங்கள் ஆகியவற்றை டிஜிட்டல் முறையில் கண்டறிந்து அவற்றிற்கு சொத்துவரி விதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, வணிகக் கட்டிடங்கள் அதிகளவில் உள்ள கிராஸ்கட் ரோடு, திவான் பகதூர் ரோடு, என்.எஸ்.ஆர். ரோடு, அவினாசி ரோடு, டாக்டர் நஞ்சப்பா ரோடு மற்றும் ஒப்பணக்கார வீதி முதலிய சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) வரிவசூல் மையம் மேம்பாடு



கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 29 வரிவசூல் மையங்களில், மேட்டுப்பாளையம் ரோடு, வரதராஜபுரம் நீர்த் தேக்கத் தொட்டி, சுங்கம், டாடாபாத் மற்றும் கணபதி வரிவசூல் மையங்கள் கடந்த நிதியாண்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியாண்டில், வரதராஜபுரம் மாநகராட்சி திருமண மண்டபம், வீரகேரளம், செல்வபுரம், பீளமேடு பயனீர் மில் சாலை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் உள்ள வரி வசூல் மையங்கள் தலா ரூ.40 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும். இதனால் பொதுமக்கள் பயன் பெறுவர்.

### (iv) புதிய வணிக வளாகங்கள்




மாநகராட்சிக்குச் சொந்தமான பழுதடைந்த நிலையில் உள்ள கடைகளை இடித்து புதியதாக கட்டி பொது ஏலத்தில் கொண்டு வருவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 1.00 கோடி கிடைக்கப்பெறும்.

மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 71 மேற்கு ஆரோக்கியசாமி ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக கட்டிடம் தரைதளத்தில் 22 கடைகளும், முதல் தளத்தில் 16 கடைகளும் ஆக மொத்தம் 38 கடைகள் கொண்டதாக உள்ளது. இக்கடைகள் கட்டப்பட்டு சுமார் 40 வருடங்களுக்கும் மேலான நிலையில் கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால், இக்கட்டிடத்தினை முழுவதும் இடித்து புதியதாக வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில், செயல்பட்டு வருகின்ற 29 கடைகளின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.45 இலட்சம் கிடைக்கப்பெறுகிறது. இக்கட்டிடத்தினை இடித்து புதிதாக வணிக வளாகம் அமைக்கும் பட்சத்தில், புதிய கடைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.90 இலட்சம் வருவாய் கிடைக்கப்பெறும்.

மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.68 பட்டேல் ரோடு, மாநகராட்சி வணிக வளாகம் 30 கடைகள் உள்ளது. இக்கடைகளுக்கு ஆண்டு வாடகையாக ரூ.23 இலட்சம் பெறப்பட்டு வந்த நிலையில், தற்போது இந்த வணிக வளாகம் மிகவும் பழுதடைந்து உள்ளதால், இதனை இடிக்க மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் அனைத்து கடைகளும் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தினை முழுவதும் இடித்து புதியதாக வணிக வளாகம் அமைக்க

நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தினை முழுவதும் இடித்து புதியதாக வணிக வளாகம் அமைக்கும் பட்சத்தில், புதிய கடைகளுக்கு ஆண்டு வாடகை தோராயமாக ரூ.75 இலட்சம் கிடைக்கப்பெறும்.

## III. பொறியியல் பிரிவு

### (i) குடிநீர் விநியோகம்

" பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தன்ன"
– அகநானூறு (252)

நீர்ப்பெருக்கால் குளம் உடையும் அபாயம் ஏற்படும் தருணம் அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரிகளைக் காக்கும் காவலன் போலவே ஒரு தாய் தனது பிறந்த குழந்தையைப் பாதுகாக்க தனது தூக்கத்தையும் தியாகம் செய்வாள் என்கிறது அகநானூறு. குழந்தையைப் பாதுகாப்பதும் நீர்நிலையைப் பாதுகாப்பதும் ஒன்றாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அதே போல நள்ளிரவிலும் நண்பகலிலும் மக்களின் வாழ்வாதாரமான குடிநீர் முறையாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதில் மாநகராட்சி மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கோவையின் அட்சய பாத்திரமாய் சிறுவாணி, பில்லூர், ஆழியாறு மற்றும் பவானி ஆகிய ஆறுகள் நீராதாரங்களாக விளங்கி கோவைக்குக் குடிநீரை வழங்குகிறது.

இதில் கடந்த ஆண்டு கேரள நீர்ப்பாசனத் துறையினரால் சிறுவாணி அணையின் நீர் எடுப்பு கோபுரத்தில் உள்ள வால்வு 03.01.2022 முதல் கட்டுப்படுத்தப்பட்டதால் பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய குடிநீரின் அளவு 98.12 மில்லியன் லிட்டர் அளவிலிருந்து படிப்படியாக குறைக்கப்பட்டு இறுதியில் பாதி அளவாகக் குறைக்கப்பட்டு பெரும் பின்னடைவைச் சந்தித்து குடிநீர் தட்டுப்பாடு நிலவியது.

இந்நிலையில், கோயம்புத்தூர் மாநகரக் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள்** எடுத்த தொடர் நடவடிக்கையின் காரணமாக சிறுவாணி அணையிலிருந்து மீண்டும் கேரள நீர்ப்பாசனத் துறையினரால் வால்வு திறக்கப்பட்டு

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குப் போதுமான அளவு தண்ணீர் பெறப்பட்டு குடிநீர் தட்டுப்பாடு சரிசெய்யப்பட்டது. **இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை இம்மாமன்றம் மூலமாக தெரிவித்துக் கொள்கிறோம்.**



கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென பிரத்யேகத் திட்டமாக பில்லூர்– III குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பில்லூர்– III குடிநீர் திட்டம் இந்நிதியாண்டில் பொதுமக்களின் முழு பயன்பாட்டிற்கு வருமென எதிர்நோக்கப்படுகிறது.

சீரான குடிநீர் வழங்குவதற்காக பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு பில்லூர் III திட்டம் ரூ.779.86 கோடி மதிப்பீட்டில் இவ்வாண்டில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இதன் மூலம் மாநகரின் குடிநீர் விநியோகம் தன்னிறைவு பெற்று சீராக அமையும் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே, இனிவரும் ஆண்டுகளில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நீராதாரங்களிலிருந்து தேவையான குடிநீர் தடையின்றி வழங்கப்படும். கோயம்புத்தூர் மாநகராட்சியில் தண்ணீர் விநியோகத்தில் தன்னிறைவு பெற்று விளங்கும் காலம் மிக விரைவில் உள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

### அ. பாரதி பூங்காவில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு பிரதான நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

15வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் பாரதி பூங்கா பகுதியில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதான நீர்த்தேக்கத் தொட்டி கட்ட ரூ.4.85 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.



24 x 7 குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் பாரதி பூங்கா பகுதியில் கட்டப்படவுள்ள 25 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலைத் தொட்டிக்கு மேல், இப்பிரதான நீர்த்தேக்கத் தொட்டி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு தொட்டிகளும் ஈரடுக்கு மேல்நிலை தொட்டியாக அமைக்கப்படவுள்ளது. இப்பணி இந்நிதியாண்டில் தொடங்கப்பட்டு ஜுன் 2024 –க்குள் முடிக்கப்படும்.

### ஆ. நவீன அளவுமானிகள்



மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட 40 வார்டு பகுதிகளில் தற்பொழுது 5 முதல் 12 நாட்கள் இடைவெளியில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதை சீர்செய்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் மேற்கொள்ள முதற்கட்டமாக நவீன அளவுமானிகள் பொருத்தி SCADA முறையில் விபரங்கள் சேகரிக்க 15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.5.06 கோடிக்கு பணிகள் எடுக்கப்பட்டு தற்போது அளவுமானிகள் பொருத்தும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்நிதியாண்டில் முடிக்கப்பட்டு முழு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

### இ. பில்லூர் இரண்டாம் குடிநீர் திட்டக் குழாயை மாற்றி அமைத்தல்



பில்லூர் II திட்டத்தின் கீழ் பெறப்பட வேண்டிய 125 எம்.எல்.டி குடிநீரினை உரிய அளவில் குறைவின்றிப் பெற 1,200 மி.மீ. விட்டமுள்ள பிரதான இரும்புக் குழாயை மாற்றி அமைக்க கான்கிரீட் படுகைகள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழாய்கள் மாற்றி அமைக்கப்பட்டபின் மாநகராட்சிக்கு கிடைக்க வேண்டிய குடிநீர், விரயமின்றி முழுவதுமாக பெறப்படும். இப்பணி இந்நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

### ஈ. பில்லூர் இரண்டாம் குடிநீர்த் திட்ட அபிவிருத்திப் பணிகள்



வெள்ளியங்காடு சுத்திகரிப்பு நிலையம் பில்லூர் அணைப்பகுதியில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் 15 வது நிதிக் குழு மானிய நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் அடிக்கடி ஏற்படும் பழுதுகள் நீக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இப்பணி உதவிகரமாக இருக்கும்.

### உ. அம்ரூத் திட்டம் – 24 மணி நேர குடிநீர் திட்டம்




கோயம்புத்தூர் மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பு உள்ள 60 வார்டு பகுதிகளில் 24x7 குடிநீர் திட்டப் பணிகள் ரூ.646.71 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1,740 கி.மீ. நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட வேண்டிய நிலையில் 877 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. 1,50,000 எண்ணிக்கையிலான வீட்டு இணைப்புகளில் 43,463 வீட்டு இணைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் புதிதாக 33 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட வேண்டியதில், 27 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை ஜெயராம் நகர், ரேவதி நகர், சேரன் நகர், காமதேனு நகர், நியூ மடத்தூர் மற்றும் கோவில்மேடு ஆகிய 6 பகுதிகளில் 4,931 குடிநீர் இணைப்புகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் 17 பகுதிகளில் 20,522 குடிநீர் இணைப்புகளுக்கு புதிய குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2023 ம் ஆண்டில் மேலும் 12 பகுதிகளுக்கு 24 மணி நேர குடிநீரும், 28 பகுதிகளுக்கு புதிய குழாய் மூலம் குடிநீரும் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் ஜனவரி 2025 க்குள் முழுமையாக முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**ஊ. இணைக்கப்பட்ட பகுதிகளில் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மற்றும் அபிவிருத்தி பணிகள்**

இணைக்கப்பட்ட பகுதிகளான துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரகேரளம், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள், வீட்டு இணைப்புகள் மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் நீருந்தும் குழாய்கள் அமைக்கவும் மற்றும் தேவையான அபிவிருத்திப் பணிகள் செய்வதற்கும் தலைமைப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனைத்து விடுபட்ட பகுதிகளிலும் முழு அளவில் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### (ii) நீர் மேலாண்மை



கோயம்புத்தூர் மாநகராட்சியின் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க நீர் மேலாண்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் வாய்க்கால்களை தூர்வாருதல், மழைகாலங்களில் மழைநீர் தேங்காவண்ணம் செல்லவும், குளங்களை புனரமைக்கவும் இந்நிதியாண்டில் ரூ.2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பிரதான குளங்களில் வாலாங்குளம், கிருஷ்ணம்பதி, சிங்காநல்லூர் குளங்கள் மற்றும் கூட்செட் சாலையில் உள்ள வாய்க்கால்களை மேம்படுத்துதல் பணிகளுக்கு 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.12.85 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணியானது நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும். இதனால் இந்நகரில் உள்ள நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படும்.

### அ. ஸ்பாஞ்ச் பூங்கா

**"நீரின்றி அமையாது உலகு"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க மழைநீர் வீணாவதை தவிர்க்கும் பொருட்டு நீரூட்டு பூங்கா அமைத்து நீர் கொள் படுகைகளுக்கு (Aquifer) நீரூட்டும் விதமாக மண்டலத்திற்கு இரண்டு வீதம் ரூ. 4.00 கோடி மதிப்பீட்டில் 10 நீரூட்டு பூங்காக்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இதன் முதற்பகுதியாக ஜெர்மன் பன்னாட்டு குழுமம் (GIZ) ன் ஒருங்கிணைப்புடன் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் மருதம் நகரில் நீரூட்டு பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஆ. செறிவூட்டப்படும் ஆழ்குழாய் கிணறுகள்



மாநகராட்சி பகுதியில் 221 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் தண்ணீர் வற்றி பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதை கண்டறிந்து **“சுவாசம்”** திட்டத்தின் கீழ் மழைகாலங்களில் வீணாகச் செல்லும் மழைநீரின் மூலம் ஆழ்குழாய் கிணறுகள் செறிவூட்டப்பட்டு நிலத்தடி நீர்மட்டம் உயர்த்தப்படும்.

### இ. மழைநீர் சேமிப்புத் தொட்டிகள்




மழைநீர் சேமிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து மாநகராட்சிக்குச் சொந்தமான அனைத்துக் கட்டிடங்களிலும் மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், இத்தொட்டிகளை இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்படும்.

### ஈ. மழைநீர் வடிகால்கள் அமைத்தல்

மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்ட பகுதிகளுக்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கவும், இயற்கை வடிகால்களை மேம்பாடு செய்யவும், **கலந்தாலோசக நிறுவனம்** தேர்வு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்ட அறிக்கை அரசிற்கு அனுப்பி உரிய நிதியுதவி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (iii). சாலை மேம்பாட்டு பணிகள்

கோயம்புத்தூர் மாநகரம் தமிழகத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரமாகும், தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படும் கோயம்புத்தூர் மாநகரில் தார்சாலை 2,240 கி.மீ நீளமும், சிமெண்ட் கான்கீரிட் சாலை 243.67 கி.மீ நீளமும், கற்சாலை 16.68 கி.மீ நீளமும் மற்றும் மண் சாலை 114 கி.மீ நீளமும் உள்ளது. குடிநீர் திட்ட பணிகள் மற்றும் பாதாளச்சாக்கடை திட்ட பணிகளால் பழுதடைந்த சாலைகளைப் புதுப்பித்து அமைக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டுத் (TNSUDP) திட்டத்தின் கீழ் 51.43 கி.மீ. சாலைகள் ரூ. 34.93 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் TURIP 2021 - 22 மற்றும் 2022 – 23 கீழ் 118.66 கி.மீ நீள சாலைகள் ரூ. 80.47 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் வரும் நிதியாண்டில் 290.11 கி.மீ சாலைகள் ரூ.135.10 கோடி மதிப்பீட்டில் பழுதடைந்த சாலைகள் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் மொத்தமாக மாநகரில் உள்ள பழுதடைந்த 408.77 கி.மீ நீள சாலைகள் ரூ. 215.57 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் சீரமைக்கப்பட்டு கோவை மாநகர மக்களின் தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.

### அ. தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP)



தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிதியின் கீழ் ரூ.34.93 கோடி மதிப்பீட்டில் 51.43 கி.மீ நீளத்திற்கு 204 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

### ஆ. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் ( TURIP )



தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் TURIP 2022 – 23 பகுதி–I சேமிப்பு நிதியின் கீழ் முதல் கட்டமாக ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் 38.08 கி.மீ நீளத்திற்கு 123 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுக்கப்பட்டு 43 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் TURIP 2022 –23 பகுதி–II சேமிப்பு நிதியின் கீழ் இரண்டாம் கட்டமாக ரூ.19.84 கோடி மதிப்பீட்டில் 29.28 கி.மீ நீளத்திற்கு 131 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் நடைப்பெற்று வருகின்றன.

தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் TURIP 2022–23 பகுதி–III கீழ் ரூ.24.64 கோடி மதிப்பீட்டில் 35.22 கி.மீ நீளத்திற்கு 182 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் பகுதி–IVல் 16.44கி.மீ நீளமுள்ள சாலைகளுக்கு ரூ.9.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்நிதியாண்டில் பணிகள்

முடிக்கப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டிற்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 36 கி.மீ நீளத்திற்கு சாலை பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### இ. நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT)

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT) 2022 –23 கீழ் ரூ.50.40 கோடி மதிப்பீட்டில் 140 கி.மீ நீளத்திற்கு சாலை பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதனை தவிர 2023 – 24 ம் நிதியாண்டில் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (NSMT) கீழ் ரூ. 31.20 கோடி மதிப்பீட்டில் 80 கி.மீ நீளத்திற்கு சாலை பணிகள் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

மேற்படி பணிகள் முடிவுற்றவுடன் மாநகரில் முக்கியமான சாலைகள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, பொது மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### ஈ. மாநில நிதிக் குழு சிறப்பு நிதி

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மண்சாலைகளை தார்சாலைகளாக அமைக்க மாநில நிதிக் குழு சிறப்பு நிதி 2022 – 23 திட்டத்தின் கீழ் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் 16.18 கி.மீ நீளத்திற்கு இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாநில நிதிக்குழு சிறப்பு நிதி 2023 – 24 திட்டத்தின் கீழ் இந்நிதியாண்டில் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் 18 கி.மீ நீளத்திற்கு மண் சாலைகள் தார்சாலைகளாக மாற்றப்படும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (iv) உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டம்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள **“உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில்”** கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளிலும் புதிய தார் சாலைகள், பழுதடைந்த சாலைகள் மற்றும் சிமெண்ட் கான்கீரிட் சாலைகளைச் சீரமைக்க 41 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.196.43 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (v) தெருவிளக்கு அமைத்தல்



கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போதைய மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டு புதிய தெருவிளக்குகள் ரூ.19.34 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அரசாணை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 10.03.2023 அன்று ரூ.19.34 கோடி திட்டம் புதிதாக தெருவிளக்கு அமைத்தல் பணிக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் உத்தரவின்படி மாநகரில் பழைய பகுதிகள் மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக ஆற்றல் செயல் திறன் வாய்ந்த எல்.இ.டி. தெருவிளக்குகள் நிறுவவும், ஏற்கனவே உள்ள சக்தி குறைந்த விளக்குகளை மாற்றி ஆற்றல் செயல் திறன் வாய்ந்த எல்.இ.டி. தெருவிளக்குகள் 7701

எண்ணிக்கைகள் அமைக்கவும் ரூ. 19.34 கோடி நிதியில் விரைவில் பணிகள் தொடங்கப்படும். மேலும் ரூ.2 கோடி மாநகராட்சி நிதியிலிருந்தும் ஒதுக்கீடு செய்து இந்நிதியாண்டில் மாநகர பகுதி முழுவதும் தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

### (vi) நமக்கு நாமே திட்டம்



பொது மக்களும் அரசும் இணைந்து தேவையான பணிகளை மேற்கொள்ள தமிழக அரசால் செயல்படுத்தப்படும் **"நமக்கு நாமே"** திட்டத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி மாநிலத்திலேயே முதல் இடத்தில் உள்ளது. 2021 – 22-ம் ஆண்டில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குத் தொகை ரூ.1.20 கோடியாகும். தமிழ்நாட்டிலேயே மிக அதிகமாக இம்மாநகராட்சி ரூ.5.36 கோடி மக்கள் பங்களிப்பாக பெற்றிருப்பது சிறப்பாகும். இதற்கு உறுதுணையாக இருந்த கோவை மாநகர மக்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2022 –23 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடம் மேம்படுத்துதல், மழைநீர் வடிகால் கட்டுதல், தார்சாலை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.2.60 கோடி அரசின் பங்காகவும் மற்றும் ரூ.3.31 கோடி பொது மக்களின் பங்காகவும் மொத்தம் ரூ.5.91 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிதியாண்டிலும், இத்திட்டத்தின் கீழ் அரசு நிர்ணயிக்கும் இலக்கை விட கூடுதலாக இம்மாநகராட்சியில் மக்கள் பங்களிப்புடன் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### (vii) அறிவியல் பூங்கா




நம் மாணவ மாணவியர்களுக்கு அன்றாட வாழ்வில் இழையோடிக் கொண்டிருக்கும் அறிவியல் அறிவை, சிந்தனையை, வேட்கையை வழங்குவதற்காக கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட டாடாபாத் பகுதியில் பல ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த அறிவியல் பூங்காவை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்து, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன் மூலம், நம் மாணவச் செல்வங்கள் அறிவியலை ஒரு சுமையாக அல்லாமல் சுகமாக பயில வழிவகை செய்யப்படும்.

கோயம்புத்தூர் மாநகர மக்களின் பொது பொழுது போக்கிற்கு உகந்ததாக உள்ள வ.உ.சி பூங்காவினை நமக்கு நாமே திட்டம் மற்றும் மாநகராட்சி நிதியின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் பாரதி பூங்காவினை ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைத்தல் பணி இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

### (viii) நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம்



கோயம்புத்தூர் மாநகராட்சி–கிழக்கு மண்டல பகுதியில் நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சாலையோரங்கள், மாநகராட்சி பள்ளி வளாகங்கள், பூங்காக்கள், மாநகராட்சி அலுவலக கட்டிட வளாகம் மற்றும் மேல்நிலை தொட்டி வளாகம் ஆகியவற்றில் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் அதற்கான பணிகள் செய்ய முதற்கட்டமாக ரூ. 1.45 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், இந்நிதியாண்டில் இத்திட்டத்தினை மற்ற மண்டலங்களுக்கும் விரிவுபடுத்த அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (ix) சந்தை வளாகம்



கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள சந்தைகளில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும் காய்கறிகள் வரத்து மற்றும் வியாபாரம் பெருமளவில் நடைபெற்று வருகிறது. அங்கு வரும் மக்களும், வியாபாரிகளும் பயன்பெறும் வகையில் மேட்டுப்பாளையம் சாலை எம்.ஜி.ஆர் சந்தை வளாகம் ரூ.3.15 கோடி மதிப்பீட்டிலும், அண்ணா சந்தை வளாகம் ரூ 4.19 கோடி மதிப்பீட்டிலும், சுந்தராபுரம் தக்காளி சந்தை வளாகம் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டிலும் மூலதன மானிய நிதியின் கீழ் சந்தைகள் நவீன வளாகங்களாக மாற்றியமைக்கப்பட்டு அடிப்படை வசதிகளுடன் புனரமைக்கப்படும். இதன் மூலம், நாள் ஒன்றுக்கு சராசரியாக 4,00,000 பொதுமக்களும், 4,500 வியாபாரிகளும் பயன்பெறுவார்கள்.

### (x) ஆய்வு மாளிகை

நம் மாநகராட்சிக்கு வரும் முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஆய்விற்கு வரும் உயரதிகாரிகள் தங்கும் வகையில் ஒசூர் சாலையில் பயன்பாடின்றி உள்ள மாநகராட்சி ஆய்வு மாளிகையினை புதுப்பித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (xi) அலுவலக கட்டிடங்கள்

மாநகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடங்கள் புதுப்பிக்கவும், புதிதாக முதற்கட்டமாக 10 எண்ணிக்கையிலான வார்டு அலுவலகங்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் வார்டு அலுவலகங்கள் கட்டவும் இந்நிதியாண்டில் ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (xii) விளையாட்டு மைதானம்



ஆர்.எஸ்.புரம் பகுதியில் சாஸ்திரி நகரில் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் அமைக்க ரூ. 12.50 கோடி நிதி உதவி அரசிடம் மானியமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக கோரப்படும்.

கரும்புக்கடை பகுதியில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (xiii) உள்விளையாட்டு அரங்கங்கள் புதுப்பித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் உள்ள பழுதுபட்ட உள்விளையாட்டு அரங்கங்களை புதுப்பித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.



### (xiv) மடிக்கணினி வழங்குதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் உதவி பொறியாளர், இளம் பொறியாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர்களுக்கு பணிகள் தொடர்பான பதிவுகளை கணினி வழியில் மேற்கொள்ள ஏதுவாக மடிக்கணினி வழங்குதலுக்கு இந்நிதியாண்டில் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படும்.

### (xv) மிதவை சூரிய சக்தி மின்கலன் திட்டம்

புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றல் முறைகளை கண்டறிந்து, மின்சாரம் தயாரிக்கும் பணிகள் இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை உக்கடம், கவுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்சக்தி திட்டங்களின் வாயிலாக 2.41 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.16.93 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, உக்கடம் குளத்தில் மிதவை சூரிய சக்தி மின்கலன் திட்டம் தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகளிலேயே முதன்முறையாக இம்மாநகராட்சியில் மின்சாரம் தயாரிப்பதற்கான பணிகள் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் தொடங்கப்படும்.

### (xvi) மயானங்கள் மேம்பாடு

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து சமய மயானங்களையும் சுத்தம் செய்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (xvii) வாலாங்குளம் வெள்ளநீர் வடிகால்

பெருமழை, வெள்ளம் போன்ற காரணங்களினால் வாலாங்குளம் நிரம்பி உபரிநீர் வெளியேறும் சமயங்களில் புலியகுளம் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்து பொதுமக்கள் மிகுந்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இதனைப் போக்கும் விதமாக வாலாங்குளம் நீர் வெளியேறும் பகுதியில் இருந்து வாலாங்குளம் திருச்சி சாலை சந்திப்பில் இருந்து சங்கனூர் பள்ளம் வரை வடிகால் வசதி ரூ. 9.00 கோடி மதிப்பீட்டில் 2022 – 2023 மற்றும் 2023 – 2024 உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். இப்பணி முடிவுறும் பொழுது வாலாங்குளம் உபரிநீர் பொதுமக்களுக்கு எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் வெளியேற்றப்படும்.

### (xviii) செங்குளம்



கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 87 மற்றும் 88 க்குட்பட்ட அம்மன் கோவில் பிரதான சாலை, குறிஞ்சி நகர், மஹாராஜா காலனி, லவ்லி கார்டன், எஸ்.என்.ஆர் கார்டன், திருநகர் காலனி, சோழன் நகர் ஆகிய பகுதிகளுக்கு செங்குளம் பகுதியிலிருந்து மழைக்காலங்களில் அதிக உபரி நீர் வெளியேறுவதாலும் மற்றும் மழைநீர் செல்வதற்கு வடிகால் இல்லாத காரணத்தாலும் சாலைப் பகுதி மற்றும் அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தி வருகிறது. எனவே இதனை சீரமைக்கும் பொருட்டு ரூ. 7.00 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் செங்குளம் ஏரியின் கிளை வாய்க்காலை தூர்வாருதல் பணிகள் சுமார் 2.50 கி.மீ நீளத்திற்கு அரசு சிறப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

## IV. பாதாள சாக்கடைத் திட்டம்

மாநகராட்சிப் பகுதிகளில் மாநகர மக்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு அனைத்து விதமான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு பாதாள சாக்கடை திட்ட பணிகள் மாநகர் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### (i) குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம்



விரிவுபடுத்தப்பட்ட 40 வார்டு பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பாதாளச் சாக்கடை அமைக்க குறிச்சி, குனியமுத்தூர் (14 வார்டுகள்) **ரூ.591.14 கோடியில்** 2 சிப்பங்களாக பணிகள் எடுத்துகொள்ளப்பட்டு 70% முடிவுற்றுள்ளன. அக்டோபர் 2023க்குள் பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இதில் வெள்ளலூரில் 30.53 எம்.எல்.டி. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு 49,916 எண்ணிக்கையிலான இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 2,50,000 பொதுமக்கள் பயன்பெறுவர்.

### (ii) வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம்



வடவள்ளி, வீரகேரளம் (4 வார்டுகள்) கவுண்டம்பாளையம், துடியலூர் (10 வார்டுகள்) பகுதிகளில் ரூ.935.92 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு

**M/s. எல் & டி கட்டுமானம்,** சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கள ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி முடிவுறும் போது 67,545 வீட்டு இணைப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்தினால் சுமார் 4,00,000 பொதுமக்கள் பயன்பெறுவர். இப்பணிகள் மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படும்.

**(iii) வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம்**



அம்ரூத் 2.0 திட்டம் (2) வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி (பகுதி), பகுதிகளில் உள்ள 10 வார்டுகளுக்கு ரூ. 357.84 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெற்று விரைவில் பணி தொடங்கும் நடவடிக்கையில் உள்ளது. இப்பணி முடிவுறும் சமயத்தில் 22,943 வீட்டு இணைப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்தினால் சுமார் 1,11,815 பொதுமக்கள் பயன்பெறுவர்.

**(iv) விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம்**



அம்ரூத் 2.0 திட்டம் (1) கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஒண்டிப்புதூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் விடுபட்ட பகுதிகளில் உள்ள 10 வார்டுகளுக்கு ரூ.187.47 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெற்று விரைவில் பணி தொடங்கும் நடவடிக்கையில் உள்ளது. இப்பணி முடிவுறும் சமயம் 33,804 வீட்டு இணைப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்தினால் சுமார் 2,02,000 பொதுமக்கள் பயன்பெறுவர்.

மேலும் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்புகள் விடுபட்ட பகுதிகளில் மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று இணைப்பு வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## V. போக்குவரத்து மேலாண்மை

### (i) நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மைத் திட்டம்



நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மாநகர சாலைகளில் நவீன தொழில்நுட்பம் மூலம் இணையதளம் மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி போக்குவரத்தினை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எளிதாக்க இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன

1. உட்கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிட்டு சாலைகளில் பாதுகாப்பினை உறுதி செய்து விபத்துக்களை குறைத்தல்
2. பாதசாரிகளை ஊக்குவித்தல்
3. அனைத்து வகையான போக்குவரத்துகளின் பயன்பாட்டினை அதிகரித்தல்
4. சிறந்த போக்குவரத்து சாலைகள் மற்றும் அட்டவணைகளை திட்டமிடல்
5. வாகன நிறுத்துமிடங்கள் மூலம் வருவாயை அதிகரித்தல்
6. சுற்றுச் சூழல் மாசுபடுதலைத் தவிர்த்தல் மற்றும் போக்குவரத்து நெரிசல்களை குறைத்து சராசரி வேகத்தை அதிகரித்தல்

இத்திட்டத்தின் இறுதி திட்ட அறிக்கை தயாரித்தல் பணி நடைபெற்று வருகிறது. இந்நிதியாண்டில் குறுகியகால இலக்கினை அடைவதற்கு தேவையான திட்டங்கள் செயல்படத்தப்படும்.

**(ii) விபத்து நிகழும் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த திட்ட மேலாண்மை கள ஆய்வுகள் மேற்கொண்டதன் அடிப்படையில் ஆலோசகர்களின் பரிந்துரையின்படி மாநகராட்சிக்குட்பட்ட 8 பகுதிகளில் அடிக்கடி விபத்துகள் நிகழ்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, விபத்துகளைத் தவிர்க்கும் வண்ணம் அப்பகுதியில் போக்குவரத்து திட்ட ஆலோசகர்களின் கருத்துகள் பெறப்பட்டு உட்கட்டமைப்புகளை மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(iii) நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிறுத்தங்கள்**



கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள பேருந்து முனையங்களில் உள்ள பேருந்து நிறுத்தங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் முதியோர், குழந்தைகள், உடல் நலம் குன்றியோர் பேருந்துகளுக்கு காத்திருக்கும் நேரங்களில் சிரமமின்றி காத்திருக்க இயலும். இதற்கென பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் 5 பேருந்து நிறுத்தங்கள் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்.

**(iv) மேம்பாலங்களில் திரைகளுடன் கூடிய நவீன வேகக்கட்டுப்பாட்டு கருவி அமைத்தல்**




மேம்பாலங்களில் பொதுமக்கள் மிகுந்த வேகத்துடன் வாகனங்களை இயக்குவதால் அடிக்கடி வாகன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு திரையுடன் கூடிய நவீன வேககட்டுபாட்டு கருவிகள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மாநகர காவல்துறையுடன் இணைந்து மேற்கொண்டு வாகனங்களின் வேகத்தை

கண்காணித்து கட்டுபடுத்தப்படும். இதனால் உயிரிழப்புகள் தவிர்க்கப்படுவதுடன் விபத்துக்கள் ஏற்படுவது முற்றிலுமாக தவிர்க்கப்படும்.

### (v) பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்துதல்



பொதுமக்கள் பெருமளவில் வந்து செல்லும் முக்கியமான பொது இடங்களான பேருந்து நிலையங்கள், சந்தைகள், சீர்மிகு நகரத் திட்ட குளக்கரைகள் உள்ளிட்ட இடங்களில் குற்றங்களைத் தவிர்க்கவும் பாதுகாப்பிற்காகவும், தேவையான எண்ணிக்கையில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்படும். இப்பணி ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### (vi) மோட்டார் அல்லாத போக்குவரத்து சாலைகள்



மாநகராட்சியில் வாகனங்கள் பயன்பாட்டினாலும், பொதுமக்களின் நடைமுறை மாற்றத்தினாலும், அதிக மோட்டார் வாகன பயன்பாட்டினாலும் நகரின் சுற்றுச்சூழல் பெருமளவு மாசடைந்து வருகிறது. எனவே சுற்றுச்சூழல் மாசடைவதை குறைக்கும் நோக்கில் மோட்டார் அல்லாத வாகனப் போக்குவரத்து பொதுமக்களிடையே ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் தொடர்ச்சியாக வரும் நிதியாண்டில் 10 சாலைகள் மோட்டார் அல்லாத வாகனப் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்த ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை திட்டத்தின் பரிந்துரையின்படி பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (vii) சாலை சந்திப்பு மேம்பாடு



கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பிரதான சாலைகள் மற்றும் குறுகலான / அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படும் சாலை சந்திப்புகளில், போதிய பார்வைத்தூரம் (Sight Distance) இல்லாத காரணத்தினாலும் அதிக அடர்த்தியில் வாகனங்கள் கடக்க வேண்டிய நிலை உள்ள காரணத்தினாலும் விபத்துகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. எனவே சாலை சந்திப்புகளில் மக்கள் நலனை கருத்தில் கொண்டு விபத்துக்களை தவிர்க்கும் வண்ணமும், பயண நேரங்களை குறைக்கும் பொருட்டும் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட 25 சாலை சந்திப்புகளில், சாலை சந்திப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.50 கோடியில் மேற்கொள்ளப்படும்.

### (viii) Table top Zebra Crossing (வரிக்கடவை) மற்றும் வழிகாட்டு பலகைகள் (Signage Board) அமைத்தல்



கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான சாலைகளில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அடர்த்தி அதிகமாக உள்ளதால் பாதசாரிகள் சாலைகளை கடக்க மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. சில நேரங்களில் அசம்பாவிதமும் நிகழ்கிறது. எனவே பாதசாரிகள் சாலைகளை கடப்பதற்கு சாலை முக்கிய இடங்கள் மற்றும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு நகரின் பல்வேறு இடங்களில் IRC வழிகாட்டுதலின்படி Signage Board , Blinkers மற்றும் சாலைகளில் வர்ணம் பூசி விபத்துக்கள் ஏற்படா வண்ணம் ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்தின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட 42 இடங்களில் முதற்கட்டமாக சாலை

பாதுகாப்பு நிதியிலிருந்து ரூ.1 கோடி மதிப்பீட்டில் வரிக்கடவை (Zebra Crossing) அமைக்கப்படும்.

### (ix) பெயர் பலகை அமைத்தல்




மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் பொதுமக்கள் வீதி மற்றும் வார்டு விவரங்களை எளிதாக அறியும் வண்ணம் அனைத்து சாலைகளிலும் QR Code வழிகாட்டுதலுடன் பெயர் பலகைகள் அமைக்கப்படும்.

### (x) ரேடியல் சாலைகள்



கோயம்புத்தூர் மாநகரட்சியின் மையப்பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களை குறைக்க நகரின் மையப்பகுதியிலிருந்து பல்வேறு பிரதான சாலைகளை அடையாளம் கண்டு அதன் மூலம் போக்குவரத்துக்கு பாதிப்பின்றி வாகனங்களை நகரின் வெளிப்பகுதிக்கு செல்வதற்கு ஏதுவாக மாநகராட்சிக்குட்பட்ட ரேடியல் சாலைகளை சீரமைக்கவும், அகலப்படுத்தவும் அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

### (xi) மின்னணு சார்ஜிங் நிலையங்கள் (E- Charging station)




பெருகி வரும் மின்னணு வாகனங்களால் பல நன்மைகள் சுற்றுச்சூழலுக்கும், மக்களுக்கும் ஏற்படுகிறது. இதனை இன்னும் அதிகரிக்க வேண்டுமானால், சார்ஜிங் நிலையங்கள் மிகவும் அவசியமாகிறது. இதனை கருத்தில் கொண்டு நகரின் 20 இடங்களில் ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி தனியார் நிறுவனங்களின் மூலம் நிறுவப்படும்.

### (xii) வாகன நிறுத்த மேலாண்மைக் கொள்கை

பெருகிவரும் வாகன போக்கவரத்தினை கருத்தில் கொண்டு, சாலைகளில் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்படும் நேர்வுகளால் ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்க்க ஒரு புதிய கொள்கை வடிவமைக்கப்படும்.

இதில் வாகனங்கள் நிறுத்தங்களை மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், சாலைகளை சுலபமான போக்குவரத்திற்கு உகந்ததாக மாற்றுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்கொள்கை வடிவமைக்கப்படும்.

## VI. திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM)

### (i) தூய்மை பணிகள்



கோவை மாநகராட்சி பகுதிகளில் மண்மேடு மற்றும் சாலையோர புதர்களை அகற்றுவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா ஒரு ஜே.சி.பி வாகனம் வீதம் 5 ஜே.சி.பி வாகனங்களும் மற்றும் மண்டலத்திற்கு தலா 2 bobcot வாகனம் வீதம் 10 bobcot வாகனங்களும் ரூ. 5.74 கோடி மதிப்பீட்டில் 15 வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்படும். சாலைகளில் தேங்கும் மண்ணை அகற்ற, இரண்டு சாலை துடைக்கும் வாகனங்கள் ரூ. 1.72 கோடி மதிப்பீட்டில் தூய்மை பாரதம் 2.0 திட்டத்தில் கொள்முதல் செய்யும் பணி நடைப்பெற்று வருகிறது. மேலும், இந்நிதியாண்டில் கூடுதலாக 3 எண்ணிக்கையிலான சாலை துடைக்கும் வாகனங்கள் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் 15 வது நிதிக்குழு மானியத்தின் கீழ் கொள்முதல் செய்யப்படும்.

### (ii) குப்பைக் கொள்கலன்கள்

இரண்டு டன் கொள்ளளவு கொண்ட 100 எண்ணிக்கையிலான குப்பைத்தொட்டிகள் ரூ. 1.35 கோடி மதிப்பீட்டில் 15 வது நிதி குழுத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்து தூய்மை பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.



### (iii) 15 வது நிதிக்குழு மற்றும் தூய்மை பாரத திட்டம் 2.0



கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.176.06 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்து 15வது நிதிக்குழு மற்றும் தூய்மை பாரத திட்டம் 2.0 இல் நிதி பெறுவதற்கு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினமும் சேகரமாகும் சுமார் 1,100 டன் கழிவுகளில் சுமார் 60 சதவீதம் அன்றைய தினமே கழிவு செய்யும் பணி செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 15 வது நிதிக்குழு மற்றும் தூய்மை பாரத திட்டம் 2.0 திட்டத்தில் இந்நிதியாண்டில் மீதமுள்ள திடக்கழிவுகளையும் கழிவு செய்யும் பணி செயலாக்கம் செய்யப்படவுள்ளது.

- சத்தி சாலையில் கூடுதல் குப்பை மாற்று நிலையம் அமைக்கும் கட்டுமான பணிக்கு மதிப்பீடு ரூ.5.50 கோடிக்கு நிர்வாக அனுமதிக்காக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது
- வெள்ளலூர் குப்பை கிடங்கில் கொட்டப்பட்டுள்ள சுமார் 17.68 இலட்சம் கனமீட்டர் பழைய கழிவுகளை பயோ மைனிங் முறையில் மறுசுழற்சி செய்யும் திட்டத்தில், முதற்கட்டமாக 9.4 இலட்சம் கனமீட்டர் பழைய குப்பைகளை மறுசுழற்சி செய்து 60 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு பசுமை பூங்காவாக மாற்றுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

  மேலும், அடுத்தகட்டமாக சுமார் 53.8 ஏக்கர் பரப்பளவில் உள்ள 8.28 இலட்சம் கனமீட்டர் பழைய கழிவுகளை மறுசுழற்சி செய்ய ரூ. 51.98 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதிக்காக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் இத்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

- வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில், 100 டன் உலர் மற்றும் ஈரக்கழிவுகளை மறுசுழற்சி செய்து, பயோகேஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு ரூ. 37.83 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை அரசின் நிர்வாக அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் இத்திட்டம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் தொடங்கப்படும்.
- அதிகரித்து வரும் நகரமயமாக்குதலால் கட்டிட கழிவுகள் இம்மாநகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் ஏரிகளில் கொட்டுதல் அதிகரித்து வருகிறது. அதனை தவிர்க்க, **“தினசரி சேகரமாகும் 100 மெட்ரிக் டன் கட்டிட கழிவுகள் மறு சுழற்சி மையம் SBM 2.0”** நிதியிலிருந்து செயல்படுத்த ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் இப்பணிகள் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.
- மாநகராட்சி பகுதிக்குள் சேகரமாகும் சுமார் 300 டன் உலர்குப்பை கழிவுகளை கையாள்வதற்கு ரூ. 29.75 கோடி மதிப்பீட்டில் 15வது நிதிக் குழுதிட்டத்தின் கீழ் இப்பணிகள் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.
- மாநகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பைகளிலிருந்து சுமார் 200 டன் உலர் மற்றும் ஈரகழிவுகளை இயந்திரம் மூலம் எரியூட்டி கிடைக்கப்பெறும் பொருட்களை பயன்படுத்தி பேவர் பிளாக் உருவாக்க ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் இத்திட்டம் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.
- மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் அறிவுரைகளை நிறைவேற்றும் பொருட்டு, வெள்ளலூர் குப்பை கிடங்கில் திறந்தவெளியில் கொட்டப்படும் கழிவுகளை தடுக்க 34 எண்ணிக்கையிலான நுண் உரக்கூடங்களின் (MCC) உட்கட்டமைப்பு பணிகள் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது மற்றும் 15 எண்ணிக்கையிலான நுண் உரக்கூடங்களின் அரவையுடன் இணைந்த சக்கையாக்கும் இயந்திரங்கள் மற்றும் கன்வேயர் பெல்ட்டுகள் ரூ.2.70 கோடி

மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் உலர் குப்பைகளை கையாள்வதற்கு 9 எண்ணிக்கையிலான பெயிலிங் எந்திரங்கள் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. இதனால் நாளொன்றுக்கு 46 டன் குப்பைகள் ஆங்காங்கே பரவலாக (Decentralised) நுண் உரக்கூடங்கள் மற்றும் உலர் குப்பை கூடங்களில் கையாளப்பட்டு வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கு செல்லும் குப்பைகளின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

### (iv) திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் இல்லாத மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சியினை திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் (ODF+) இல்லாத சிறந்த மாநகராட்சியாக அறிவிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது.

### அ. தனிநபர் இல்ல கழிப்பிடம் (IHHL)



மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன் கீழ் 2022–2023 ஆண்டுக்கு 500 தனிநபர் வீட்டு கழிப்பிடங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு கழிப்பிடம் ஒன்றுக்கு திட்ட மதிப்பீட்டு தொகையாக ரூ.30,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் மானியமாக ரூ.4,000/– மாநில அரசின் மானியமாக ரூ.2,667/– மற்றும் மாநகராட்சியின் பங்கு தொகை ரூ.2,667/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதில் முதல்கட்டமாக 360 நபர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

### ஆ. சமுதாயம் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள்




கோயம்புத்தூர் மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 (2022–2023) ன் கீழ் 5 சமுதாய கழிப்பிடங்கள் ரூ.1.33 கோடி மதிப்பீட்டிலும், 3 பொதுக்கழிப்பிடங்கள் ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ. 2.34 கோடி மதிப்பிட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### இ. தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் (PMCC)

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர், அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி மாநகராட்சியினை அழகான, மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான மாநகரமாக உருவாக்கும் பொருட்டு தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப் பணிகளும், மூன்றாம் புதன்கிழமைகளில் பள்ளிக்கூடங்களில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### (v) தூய்மை பாரதம் திட்டம் மற்றும் 15வது நிதிக்குழு (SBM 2.0) வாகனங்கள்



மாநகராட்சியில் மக்கள் சேவைகளை விரைந்து வழங்கும் விதமாக தூய்மை பாரதம் திட்டம் (SBM 2.0) ன் கீழ் 2022–23 ம் நிதியாண்டில் கீழ்க்கண்ட வாகனங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர்

அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் வாகனங்கள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு முழு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

- ஒரு எண்ணிக்கை பொக்லைன் ரூ.69 இலட்சம் மதிப்பீடு.
- 10 எண்ணிக்கைகள் மண் அள்ளும் இயந்திர வாகனம் (Skid steer loader machine) ரூ.3.86 கோடி மதிப்பீடு.



- 4 எண்ணிக்கை மண் அள்ளும் கனரக வாகனங்கள் (Excavator cum loader machine) ரூ.1.88 கோடி மதிப்பீடு.
- குளங்களில் ஆகாயத்தாமரைகள் அகற்ற ஏதுவாக ஒரு எண்ணிக்கை 30–50 Hp 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட நீர்ப்பரப்பு மற்றும் நிலப்பரப்பில் இயங்கக்கூடிய (Amphibian) வாகனம் ரூ.45 இலட்சம் மதிப்பீடு.
- பிரதான சாலைகளை சுத்தம் செய்ய ஏதுவாக 2 எண்ணிக்கையிலான 4.50 முதல் 6.0 க.மீட்டர் வரை கொள்ளளவு கொண்ட கனரக வாகனத்துடன் கூடிய சாலை சுத்தம் செய்யும் நவீன இயந்திரங்கள் (Vehicle mounted road sweeping machines) ரூ.1.72 கோடி மதிப்பீடு.
- வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்ல 100 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் (Battery operated vehicles) ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாகனங்கள் முழு பயன்பாட்டிற்கு வந்தவுடன் மாநகர் முழுவதும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எவ்வித தொய்வுமின்றி முழுவீச்சில் நடைபெறும்.

### (vi) உயர் அழுத்த கழிவறை சுத்தம் செய்யும் இயந்திரம்




உயர் அழுத்தத்துடன் தண்ணீர் பீய்ச்சி அடித்து கழிப்பறைகளை சுத்தம் செய்யும் விதமாக நவீன கழிப்பறை சுத்தம் செய்யும் வாகனங்கள் மண்டலத்திற்கு ஒரு வாகனம் வீதம் 5 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் **(Jetting Water Wash Machine)** ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

### (vii) பிளாஸ்டிக் அரவை இயந்திரம்

பொது மக்கள் பயன்படுத்தும் குடிநீர், குளிர்பான மற்றும் இதர பிளாஸ்டிக் பாட்டில்கள் போன்றவற்றை சேகரமாகும் இடத்திலேயே அரைத்து, குப்பையை தனித்தனியாக பிரித்து பயன்படுத்துவது மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை தவிர்க்க ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் அரவை இயந்திரம் நிறுவப்படும். உபயோகத்திற்கு ஏற்றவாறு அனைத்து மண்டலங்களிலும் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### (viii) மீண்டும் மஞ்சப்பை



ஒரு முறை பயன்படுத்தும் நெகிழி பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டும், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் பொருட்டும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் **“மீண்டும் மஞ்சப்பை திட்டம்”** முழுவீச்சில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், பொதுமக்கள், வியாபார நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு சங்கங்களுக்கு நகரங்களின்

தூய்மைக்கான மக்கள் இயக்கத்தின் மூலம் (PMCC) விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தனியார் பங்களிப்புடன் சுமார் **30,000** மஞ்சப்பை பெறப்பட்டு பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு முறை பயன்படுத்தும் நெகிழியை விற்பனை செய்பவர்களைக் கண்டறிந்து பறிமுதல் செய்து அபராதம் விதிக்க அலுவலர்கள் கொண்ட தனிக் குழு ஏற்படுத்தப்பட்டு, கடந்த **3** மாதங்களில் **4** மெட்ரிக் டன் நெகிழி பறிமுதல் செய்யப்பட்டு ரூ.**9,49,200/–** அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட நெகிழியை பயன்படுத்தி பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கும் ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிதியாண்டில் பொதுமக்களுக்கு **1,00,000** எண்ணிக்கையிலான மஞ்சப்பை விநியோகம் செய்து நெகிழி உபயோகத்தை முற்றிலும் குறைக்க வழிவகை செய்யப்படும்.

## VII. கோயம்புத்தூர் சீர்மிகு நகரத் திட்டம் (Smart City)



இந்தியாவில் உள்ள நகரங்களை மேம்படுத்துவதற்கான சீர்மிகு நகரத் திட்டத்தில் முதற்கட்ட நிலையில் அகில இந்திய அளவில் 100 நகரங்களுடன் பல்வேறு போட்டிகளில் கோயம்புத்தூர் மாநகராட்சி பங்கேற்று கோவை மாநகரத்தின் மிகச்சிறந்த திட்ட அம்சங்களினால் இந்திய அளவில் 13–ம் இடத்திலும், தமிழ்நாடு அளவில் முதலிடத்திலும் 2016–ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டது.



சீர்மிகு நகர திட்டத்திற்கென இம்மாநகராட்சிக்குப் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.1000 கோடி ஆகும். இதில் மத்திய அரசு ரூ.500 கோடி மற்றும் மாநில அரசு ரூ.500 கோடி நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசிடமிருந்து ரூ.490 கோடியும், மாநில அரசிடமிருந்து ரூ.500 கோடியும் பெறப்பட்டுள்ளது.




இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 54 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 39 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 பணிகள் நடைபெற்று வருகிறது.

### (i) தற்போது நடைபெற்று வரும் பணிகள்

கோவையில் உள்ள குளங்களை மேம்படுத்தும் திட்டம் உத்தேசிக்கப்பட்டு குளத்தின் கரையைப் புனரமைத்து மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. குளத்தின் கரையின் மீது தனித்தனியாக நடைபயிற்சி பாதை, மிதிவண்டி பாதை இரு புறமும் மரங்களுடன் பசுமைப் பாதைகள், பொதுமக்கள் அமரும் விதமாக இருக்கைகள் மற்றும் நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளது. கரை முழுவதும் வண்ணமயமான செடிகளுடனும், பூங்காவுடனும் இக்குளக்கரைகள் பொலிவூட்டப்பட்டுள்ளது. மேலும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பறவைகள் பார்வையிடும் தளம், மக்கள் உடல் நலம் மேம்படுத்தத் தேவையான யோகா, தியானம் ஆகிய பயிற்சிகளுக்கான வசதிகள் விளையாட்டுத் திடல், பார்வையாளர் அரங்குகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 30.4.2023 க்குள் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். பணிகளின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு :

- பெரிய குளத்தின் கரையை புனரமைத்து மேம்படுத்துதல் – ரூ.62.17 கோடி மதிப்பீடு
- வாலாங்குளத்தின் கரையை புனரமைத்து மேம்படுத்துதல் – ரூ.67.86 கோடி மதிப்பீடு
- செல்வம்பதி மற்றும் குமாரசாமி குளத்தின் கரையை புனரமைத்து மேம்படுத்துதல் – ரூ.31.25 கோடி மதிப்பீடு
- கிருஷ்ணம்பதி குளத்தின் கரையை புனரமைத்து மேம்படுத்துதல் – ரூ.19.36 கோடி மதிப்பீடு
- குறிச்சிகுளம் புனரமைப்பு மற்றும் மேம்பாடு – ரூ.52.16 கோடி மதிப்பீடு
- பந்தய சாலையினை மாதிரி சாலையாக மாற்றுதல் – ரூ.40.67 கோடி மதிப்பீடு

- வெள்ளலூர் குப்பை கிடங்கில் குவிக்கப்பட்டுள்ள பழைய கழிவுகளை பயோமைனிங் முறையில் கழிவு செய்தல் – ரூ.60.11 கோடி மதிப்பீடு
- ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) – ரூ.14.11 கோடி மதிப்பீடு
- சீர்மிகு நகர அனுபவ மையம் (Smart City Experience Centre) – ரூ.3.00 கோடி மதிப்பீடு
- நீர்த்திரைக் காணொலி (Movie on Water ) – ரூ.3.00 கோடி மதிப்பீடு
- நூலகம் மற்றும் அறிவுசார் மையம் (Knowledge & Study Centre) – ரூ.2.50 கோடி மதிப்பீடு
- மோட்டார் அல்லாத போக்குவரத்து சாலைகள் (Non Motorised Transport Corridor) – ரூ.7.40 கோடி மதிப்பீடு
    - பெரியகடை வீதி – ரூ.1.85 கோடி மதிப்பீடு
    - இராஜ வீதி – ரூ.1.69 கோடி மதிப்பீடு
    - நஞ்சப்பா சாலை – ரூ.1.60 கோடி மதிப்பீடு
    - கிராஸ்கட் ரோடு – ரூ.2.26 கோடி மதிப்பீடு

சீர்மிகு நகரத் திட்ட குளங்களில் வருவாய் வரக்கூடிய திட்டங்களை ஆராய்ந்து செயல்படுத்துவதன் வாயிலாக பெறப்படும் வருவாய் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினங்களை ஈடுகட்டி இத்திட்டத்தினை உயிரோட்டமாக வைத்துக்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

### (ii) சீர்மிகு நகரத் திட்ட குளங்களில் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகள்



கோயம்புத்தூர் மாநகராட்சி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பெரியகுளம், செல்வசிந்தாமணி, வாலாங்குளம், செல்வம்பதி குமாரசாமி, குறிச்சி மற்றும் கிருஷ்ணம்பதி ஆகிய குளங்களில் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளது. இப்பணியில் குளத்திற்கு வரும் நீர் வழிப்பாதையில் கழிவுநீர் கலந்து வருவதை சுத்திகரிக்க, பெரியகுளம், வாலாங்குளம் மற்றும் செல்வசிந்தாமணி குளங்களில் முறையே 4 எம்.எல்.டி, 3 எம்.எல்.டி மற்றும் 1 எம்.எல்.டி சுத்திகரிப்பு நிலையம் (Waste Water Treatment) அமைக்கப்பட்டு பெரியகுளம் மற்றும் செல்வசிந்தாமணி குளங்களில் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் ஈர நிலத்தின் (Wet land) வழியாக குளங்களில் கலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### (iii) நூலகம் மற்றும் அறிவுசார் மையம்

சீர்மிகு திட்டத்தின் கீழ் ஆடிஸ் வீதியில் தொடங்கப்பட்ட அறிவுசார் நூலகம் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு இம்மாதம் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. இதன் மூலம் போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுவர்.




மேலும், இந்நிதியாண்டில் பயன்பாடின்றி உள்ள பல்வேறு நூலகங்கள் புனரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். தேவைப்படும் இடங்களில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும். இதற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.

## VIII. நகரமைப்புப் பிரிவு

**" கண் நிறைந்த பச்சை வண்ணம்**
**காட்சிக்கு அழகாக**
**மண் செழித்து மக்கள் வளம்பெற**
**நகரெல்லாம் பசுமையுற**
**நாளெல்லாம் மகிழ்வு வரும். "**

### (i) செம்மொழிப் பூங்கா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசு 2023–24ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கோயம்புத்தூர் மாநகருக்கென அறிவிக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்கா மொத்தம் 165 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு கட்டங்களாக மத்திய சிறைச்சாலை வளாகப் பகுதியில் அமைக்கப்பட உள்ளது. முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கையை பாதுகாக்கும் வகையிலும், பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் தேவை, வசதி மற்றும் நலன் அடிப்படையில் சிறந்த சுற்றுச்சூழல், கல்வி, ஆராய்ச்சி, பொழுதுபோக்கு ஆகியவற்றிற்குப் பயன்படும் வகையிலும் உலகத் தரத்துடன் ரூ.172 கோடியில் அமைக்கப்பட உள்ளது. குறிஞ்சி வனம், செம்மொழி வனம் ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க வனங்கள் இப்பூங்காவில் அமைக்கப்படும். மேலும், மகரந்தப் பூங்கா, நீர்ப்பூங்கா, மூலிகைப்பூங்கா, நறுமணப் பூங்கா, பாறைப் பூங்கா, மூங்கில் பூங்கா, சிறுவர் பூங்கா, மலர்ப் பூங்கா மற்றும் மரவனம் ஆகியவைகளும் அமைக்கப்பட உள்ளது. உள் அரங்கம், வெளியரங்கம், பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் மற்றும் இதர வசதிகளுடன் பசுமைக் கட்டிடங்கள் அமைக்கப்படும்.



இந்நிதியாண்டில் முதற்கட்டமாக ரூ.86 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்படும்.

### (ii) நகர பசுமை மயமாக்குதல்



கோயம்புத்தூர் மாநகரை பசுமை மயமாக்கும் பொருட்டு தனியார் பங்களிப்புடன் அரசு பொது ஒதுக்கீடு இடங்களில் 2022–23 ஆம் ஆண்டில் 75 இடங்களில் 49.26 ஏக்கர் பரப்பளவில் மியாவாக்கி முறையில் அடர்வனம் அமைக்கப்பட்டு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் கூடுதலாக 100 இடங்களில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட்டு அடர்வனக் காடுகள் புதிதாக அமைக்கப்படும்.

### (iii) நகர் அழகுபடுத்துதல்



கோயம்புத்தூர் மாநகராட்சியின் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான காந்திபுரம் மேம்பாலம், 100 அடி சாலை மற்றும் அவிநாசி சாலைகளில் கலை கலாச்சார பண்பாட்டு வண்ண ஓவியங்கள் வரையப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் அனைத்து பொது இடங்களிலும் வண்ண ஓவியங்கள் வரையப்படும். இதனால் மக்களின் கண்களும் மனமும் குதூகலம் பெறும்.

உக்கடம் சுற்றுப் பகுதியில் உள்ள உயர்மட்ட பாலம், அரசு கட்டிடங்கள் ஆகியவற்றில் 6 கட்டிடங்களில் கலை கலாச்சார வண்ண ஓவியங்கள் (Street Art) வரையப்பட்டது. இந்நிதியாண்டில் மேலும் 6 கட்டிடங்களில் வண்ண ஓவியங்கள் வரையப்படும்.

### (iv) தீவுத்திடல் அமைத்தல்

2022–23 ம் ஆண்டில் 9 தீவுத்திடல்கள் தனியார் பங்களிப்புடன் பூங்கா அமைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் 20 இடங்களில் தனியார் பங்களிப்புடன் தீவுத்திடல் பூங்கா, செயற்கை நீரூற்று மற்றும் கலை கலாச்சார சிலைகள் அமைக்கப்படும்.

### (v) பொது ஒதுக்கீடு இடங்களை வேலி அமைத்துப் பாதுகாத்தல்




அரசு நிலங்களை மீளப்பெறுதல் மற்றும் பாதுகாத்தல் திட்டத்தின் கீழ் ரூ.1.97 கோடி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாவட்ட நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில், குழுக்கள் அமைக்கப்பட்டு நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 37 பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு ரூ.247.70 கோடி மதிப்பிலான 24.28 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு முட்கம்பி வேலி அமைத்து பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு அனைத்து பொது ஒதுக்கீடு இடங்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி முட்கம்பி வேலி அமைத்து பாதுகாக்கப்படும்.

பொது ஒதுக்கீடு இடங்கள் 2022–23–ம் ஆண்டில் 1,233 இனங்கள் உட்பிரிவு செய்து மாநகராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்களுக்கு இந்நிதியாண்டில் வருவாய் உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### (vi) செயற்கைக் கோள் மூலமாக புவியியல் நிலக்குறியீடு செய்தல் (Geo Mapping)

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், பூங்கா, விளையாட்டுத் திடல், சமுதாயக் கூடம் உள்ளிட்ட பொது ஒதுக்கீடு இடங்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய அனைத்து சொத்துகளும் செயற்கைக்கோள் மூலமாக புவியியல் நிலக்குறியீடு **(Geo Mapping)** ஜியோ சர்வே மேற்கொள்ளப்பட்டு **1,713** இடங்கள் அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநகராட்சிக்குச் சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### (vii) திட்டச்சாலை

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட திட்டச்சாலைகள் இந்நிதியாண்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினமாக ரூ. **140.00** கோடி உட்கட்டமைப்பு (I & A Charges) நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



- வடக்கு மண்டலம், வார்டு எண். **4**, சரவணம்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.**5**, உத்தேசிக்கப்பட்டுள்ள அண்ணாநகர் முதல் சத்தியமங்களம் சாலை வரை GKS நகர் வழியாக செல்லும் **60** அடி அகல திட்டச்சாலை.
- மேற்கு மண்டலம், வடவள்ளி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். **4, 5, 6–**ல் அமையும் **60** அடி அகல திட்டச்சாலை.
- தெற்குமண்டலம், குண்டக்காமுத்தூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.**5–**ல் அமையும் குண்டக்காமுத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி முதல் கோவைப்புதூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைப்பிரிவு வரை **80** அடி அகல 'BB' திட்டச்சாலை.

➢ கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.3–ல் அமையும் 60 அடி அகல திட்டச்சாலை.

### (viii) பனை வளர்ப்புத் திட்டம்



தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரத்தின் வேர்கள் மண் அரிப்பை தவிர்க்கும் இயற்கை அரணாக விளங்குவதால், தமிழ்நாடு அரசின் **“பனை வளர்ப்பு திட்டத்தின்”** கீழ் அம்மரங்களை இம்மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் நீர்நிலைகளின் கரைகளில் 10,000 எண்ணிக்கையில் நட்டு வளர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### (ix) வண்ணத்துப் பூச்சி பூங்கா



குமாரசாமி குளம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இக்குளக்கரையில் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் வண்ணத்துப் பூச்சி பூங்கா அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் கண்டறியப்பட்டுள்ளது. அதன்அடிப்படையில், இந்நிதியாண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே முதன்முறையாக வண்ணத்துப் பூச்சி பூங்கா அமைக்கப்படும்.

## IX. பொது சுகாதாரப் பிரிவு

"உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடலை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே! "

உடம்பை கோவிலாக்கினால் மனம் தெய்வீகம் ஆகிவிடும். வளமான வாழ்வுக்கு இதம் சேர்க்கும் சுகாதாரப் பிரிவில், இந்நிதியாண்டில் பல்வேறு திட்டங்களை வகுத்து செம்மைப்படுத்த இம்மாநகராட்சி செயல்படும் என்பதில் ஐயமில்லை.

### (i) கூடுதல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. தேசிய சுகாதார குழும வழிகாட்டுதலின்படி, நிலையம் ஒன்றிற்கு 50,000 மக்கள்தொகை இருத்தல் வேண்டும். கோயம்புத்தூர் மாநகராட்சியின் மக்கள்தொகை அடிப்படையில் புதிதாக 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2022–2023ம் நிதியாண்டில் மணியகாரன்பாளையத்திற்கு புதிதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதன் மூலம் இப்பகுதியில் வசித்துவரும் சுமார் 60,000 மக்கள் பயனடைவார்கள்.

இதனால் பொது மக்கள் மற்றும் நோயாளிகள் 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கணபதி மற்றும் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வெள்ளக்கிணறு நிலையங்களுக்கு செல்வது தவிர்க்கப்பட்டு, இந்நிலையத்தில் சிகிச்சை பெற ஏதுவாகும். இந்நிதியாண்டில் இப்பணி ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப கூடுதலாக 5 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### (ii) நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் பணியாளர்கள்



கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக இருந்த 20 செவிலியர் பணியாளர்கள், 16 நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் மருந்தாளுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தம் செய்யப்பட்டு மேற்படி பணியாளர்களுக்கான ஊதியத்தொகை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதனால் சுகாதாரப் பணிகள் தொய்வின்றி நடைபெற்று மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

### (iii) நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்




32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உட்பட்ட 64 நலவாழ்வு மையங்கள் மற்றும் 3 ஆய்வுக்கூடங்கள் கட்டும் பணி ரூ.16.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 45 மையங்களும் 3 ஆய்வுக் கூடங்களும் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 19 நல்வாழ்வு மையங்களின் கட்டுமானப் பணிகள் வரும் மே 2023–க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும், தற்போது கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ள 45 நல்வாழ்வு மையங்களுக்கு மனிதவளம் அளிக்கும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் நல்வாழ்வு மையம் ஒன்றிற்கு தலா ஒரு மருத்துவ அலுவலர், செவிலியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர் ஆகிய பணியிடங்கள், கோயம்புத்தூர் மாவட்ட சுகாதார நலச்சங்கத்தின் வாயிலாக நியமனம் செய்யப்படுவர்.

## (iv) நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்பாடு

**"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கிணங்க, அனைத்து மக்களுக்கும் சீரான மருத்துவ வசதிகள் வழங்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த முன்னோடித் திட்டங்களான, **"மக்களைத் தேடி மருத்துவம்"** **"நம்மைக் காக்கும் 48"** நல்வாழ்வு மையங்கள், உள்ளிட்ட சீரிய திட்டங்களுக்காக இம்மாநகர மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (v) சமுதாய நகர்நல மையம்




மாநகராட்சி பகுதிகளில் உள்ள 5 உயர்த்தப்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.6.25 கோடி மதிப்பிட்டில் தேசிய நகர்புற சுகாதார முகமை (NUHM) திட்டத்தின் கீழ் மேம்பாட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் இப்பணிகள் முடிக்கப்பட்டு முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இப்பணிகளால் வெளிநோயாளிகள், உள்நோயாளிகளுக்கான சிகிச்சைகளை மேற்கொள்வது மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து அரசு மருத்துவமனைக்கு பிரசவத்திற்காக பரிந்துரை செய்து அனுப்புவது தவிர்க்கப்படுவதுடன், அந்நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கர்ப்பிணி பெண்களுக்கு நிலையங்களிலிலேயே பிரசவங்கள் பார்க்கப்படும்.

### (vi) மக்களைத் தேடி மருத்துவம்



மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் வசித்துவரும் மக்கள் தொகையில் 77% சதவீதம் மக்கள் பரிசோதனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இதுநாள் வரை 12,10,031–ம் பேர் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். இதில், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளவர்கள் மற்றும் இரண்டும் உள்ளவர்கள் என மொத்தம் 72,894 பேர் கண்டறியப்பட்டு அவர்கள் வசிக்கும் வீடுகளுக்கே சென்று மருந்துகள் வழங்கப்படுகிறது. மேலும் இதில் 9,289 பேருக்கு இயன்முறை சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. 14 பேருக்கு சிறுநீரக பாதிப்பு கண்டறியப்பட்டு சுத்திகரிப்பு பேக் வழங்கப்பட்டுள்ளது.

## புதிய திட்டங்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்த பரிசோதனை மேற்கொண்டு ஆரோக்கியமான பிரசவத்திற்காக Cell Counter மருத்துவ உபகரணக் கருவிகள் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

இந்நிதியாண்டில் 32 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சிசிடிவி கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்படும்.

நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளை தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகத்தின் கிடங்கிலிருந்து பெற்று அனைத்து சுகாதார நிலையங்களுக்கும் தங்குதடையின்றி வழங்கும் பொருட்டு ஒரு புதிய வாகனம் வாங்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் அறுவை சிகிச்சை அரங்கம் வசதிகள் கொண்ட 9 நிலையங்களுக்கு ஜென்செட் வசதிகள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும். மற்ற 23 நிலையங்களுக்கு மின்சேமிப்பு திறனுடைய தடையில்லா மின்சார விநியோக சாதனங்கள் **(UPS)** ரூ.14 இலட்சம் நிதியில் பொருத்தப்படும்.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் பாதுக்காக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, வாட்டர் டாக்டர் ரூ.16 இலட்சம் நிதியில் அமைக்கப்படும். இதன் மூலம் இந்நிலையங்களில் சிகிச்சை பெற வரும் பொது மக்கள் மற்றும் நோயாளிகள் பயன்பெறுவர்.

**(i) சாலையோர வியாபாரிகள்**



கோயம்புத்தூர் மாநகராட்சியில் 21,619 சாலையோர வியாபாரிகள் உள்ளதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதில், 23,573 நபர்கள் கண்டறியப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு **PM SVANidhi** திட்டத்தின் கீழ் முதல் தவணையாக நபருக்கு ரூ.10,000/–ம் வீதம் 10,112 பேருக்கும், ரூ.20,000/–ம் வீதம் 2,450 பேருக்கும் மற்றும் மூன்றாம் தவணையாக ரூ. 50,000/ம் வீதம் 20 பேருக்கும் என மொத்தம் 12,582 பேருக்கு கடனுதவி வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர். மேலும் இந்நிதியாண்டில் சாலையோர வியாபாரிகளுக்கென தகுந்த இடங்கள் கண்டறியப்பட்டு விற்பனை மண்டலங்களாக அறிவிக்கப்படும்.

**(ii) தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையம்**

மாநகராட்சியில் தெருநாய்களுக்கான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 1.21 இலட்சம் தெருநாய்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களில் சுற்றி திரியும் 3,320 தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்நிதியாண்டில் புதிதாக இரண்டு தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையங்கள் வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனால் இந்நிதியாண்டில் 5,000 தெருநாய்களுக்கு கருத்தடை சிகிச்சை அளிக்கப்படும்.



### (iii) வீடற்றோர் தங்கும் விடுதி




மாநகராட்சி பகுதியில் உள்ள வீடற்றோரின் நலனை பேணி காக்கும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதி தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் ரூ.1.40 கோடி மதீப்பீட்டில் கடலைக்கார வீதியில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றவுடன் 100 வீடற்றோர் பயன்பெற இயலும்.

மேலும், கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களில் வீடற்றோர் தங்கும் விடுதிகள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு இந்நிதியாண்டில் கூடுதலாக 2 தங்கும் விடுதிகள் ஏற்படுத்தப்படும்.

### (iv) மனமகிழ் மன்றம்

மாநகராட்சி பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை பணி மேற்கொள்ளும் பணியாளருக்கு மேற்கு மண்டலத்தில் மனமகிழ் மன்றம் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதனால் பணியாளர்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட்டு, புதிய உத்வேகத்துடன் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக உள்ளது. இத்திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்தி, மற்ற நான்கு மண்டலத்திற்கும் ஒன்று வீதம் புதிதாக 4 மனமகிழ் மன்றங்கள் இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்.

### (v) பறவைகள் பூங்கா (Bird’s Park)



கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வ.உ.சி பூங்காவில் 2 ஏக்கர் பரப்பளவில் தனியார் பொதுபங்களிப்பு திட்டத்தின் கீழ் **“பறவைகள் பூங்கா”** உருவாக்கப்படும். இப்பூங்காவில் 60க்கும் மேற்பட்ட பறவை இனங்கள், அயல்நாட்டு பறவைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகள் காட்சிப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படும்.

இப்பூங்காவில் குழந்தைகள் அறிவு திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறு கற்றல் செயலிகள் நிறுவப்படும்.

### (vi) நடமாடும் கழிப்பறை




கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பல்வேறு வர்த்தக பகுதிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பல்வேறு பகுதிகளில் போதுமான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தும் நோக்கில் ஒரு நடமாடும் கழிப்பறை வாகனம் ரூ. 32 இலட்சம் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### (vii) நம்பிக்கைப் பூங்கா



மாநகரில் முதன்முறையாக அனைத்து தரப்பு மக்களும் அணுகும் விதமாக பூங்கா செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள், சிறப்புக் குழந்தைகள் உள்ளிட்டோருக்கான பல்வேறு வசதிகள் இப்பூங்காவில் செயல்படுத்தப்படவுள்ளது. இந்தப் பூங்கா சுமார் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

## X. கல்வி பிரிவு

"வெள்ளத்தால் போகாது
வெந்தணலால் வேகாது
வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழிய
குறைபடாது . . . "

விவேக சிந்தாமணியின் விவேக வரிகள் இவை. வளரும் தொழில் நுட்பத்தோடு இன்றைய இளைய சமுதாயம் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில்.

கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் 84 மாநகராட்சி பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. மொத்தம் 24,771 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். 1417 ஆசிரியர் மற்றும் 92 ஆசிரியரல்லாத பணியாளர்கள், பணியாற்றி வருகின்றனர். இப்பள்ளிகளில் 78 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் செயல்படும் 64 பள்ளிகளில் 13867 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் அனைத்தும் மாநகராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 2021–2022–ம் கல்வியாண்டில் மாநகராட்சிப் பள்ளிகளின் பொதுத்தேர்வு தேர்ச்சி சதவிகிதம் பின்வருமாறு,
    - பத்தாம் வகுப்பு – 87.77%
    - பதினோராம் வகுப்பு – 87.57%
    - பனிரெண்டாம் வகுப்பு – 92.17%

➢ இக்கல்வியாண்டில் (2022–2023) 100% தேர்ச்சியினை இலக்காகக் கொண்டு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக இருந்த 24 முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்ட பணி நாடுநர்களை நேரடி நியமனம் செய்து நிரப்பப்பட்டுள்ளன.

## (i) மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்



பெரும்பாலும் ஏழ்மை நிலையிலுள்ள குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர்.

1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களில் காலை நேரத்தில் உணவு அருந்தாமல் பள்ளிக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள காரணத்தினால் அவர்களுக்கு போதிய ஊட்டச் சத்து இல்லாமையால் உடல்நலம் வலுவிழந்தும், அதனால் கற்றல் திறன் குறைவும் ஏற்படுகிறது. இதன் காரணமாக வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.09.2022 முதல் துவக்கப்பட்டு 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு காலை நேர உணவு வழங்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக பழைய கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 62 ஆரம்பப் பள்ளிகளில் இத்திட்டம் 15.09.2022 முதல் துவங்கப்பட்டு நாளது வரை சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 7255 மாணவ / மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

தற்போது புதிதாக இணைக்கப்பட்ட பகுதியில் உள்ள 59 மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகளுக்கு 01.03.2023 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 7961 மாணவ / மாணவியர் பயன்பெற்று வருகின்றனர். நாளதுவரை மொத்தம் 15216 மாணவ / மாணவியர் தினசரி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்று வருகின்றனர்.

### (ii) மாதிரிப் பள்ளி

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கென அனுமதிக்கப்பட்டுள்ள மாதிரிப்பள்ளி (Model School) இர.ச.புரம் மாநகராட்சி பள்ளியில் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கென மாநகராட்சி நிதியிலிருந்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய வசதிகள் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் நமக்கு நாமே (2022–23) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்நிதியாண்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.2 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இப்பள்ளிகளில் சமயலறை, மாணவ மாணவியர்களுக்கென தனித்தனியே உணவருந்தும் அறை, சமையலர் அறை, பொருள் வைப்பு அறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

### (iii) பள்ளிகளில் உட்கட்டமைப்பு பணிகள்

2022–23ம் ஆண்டில் ரூ.15.59 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் கழிப்பிடங்கள் கட்ட மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து ரூ.7.51 கோடி மதிப்பிலும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.8.08 கோடி மதிப்பிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### (iv) மாநகராட்சிப் பள்ளிகளில் சிறப்புத்திட்டங்கள்




- மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்திட மாநகராட்சியின் அனைத்துப் பள்ளிகளுக்கும் ரூ.16 இலட்சம் மதிப்பில் நூலக புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- மாநகராட்சியின் அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியர் பயன்பாட்டிற்கென அனைத்துப் பள்ளிகளுக்கும் "**தி இந்து – யங் வேர்ல்ட் மற்றும் தினகரன் – வெற்றிக்கொடி**" நாளிதழ் இணைப்புகள் வழங்கப்படுகின்றன.
- மார்ச் / ஏப்ரல் 2023–ல் பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத உள்ள மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகளின் போது மாலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.
- 2022–2023–ம் கல்வியாண்டில் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பதினொன்று மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் "Python Programme" கணினி பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

## புதிய திட்டங்கள்

### (i) மெய்நிகர் தொழில் நுட்பம்



மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் மாணவ, மாணவியரிடையே ஊடாடும் கற்றல் திறனை (Interactive Learning) மேம்படுத்த இணைப்பு நிஜமாக்கல் (Augmented Reality) மற்றும் மெய்நிகர் உண்மை (Virtual Reality) தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### (ii) உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்



அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் கல்வி முன்னேற்றத்திற்கு இணையத் தொடர்புடன் கூடிய கணினி உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Lab) அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று முதற்கட்டமாக மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 700 மற்றும் அதற்கு கூடுதலாக பயிலும் மாணவர் எண்ணிக்கை உள்ள 6 பள்ளிகளில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கல்வி நிதியிலிருந்து உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் இந்நிதியாண்டில் அமைக்கப்படும்.

### (iii) ஸ்மார்ட் வகுப்பறை

கற்பித்தல் பயிற்சியில், மென்பொருள்கள் வாயிலாக பாடங்களை உருவாக்கி கணினி மூலம் வகுப்பறைத் திரைகளில் மாணவ, மாணவிகளுக்கு கற்பித்தல் பணி மேற்கொள்ளப்படும் போது பாடக் கருத்துக்களை உள்வாங்குவது எளிதாக அமையும். இதற்கென முதற்கட்டமாக மாநகராட்சியின் 25 பள்ளிகளில் ரூ.60 இலட்சம் மதிப்பில் ஸ்மார்ட வகுப்பறை இந்நிதியாண்டில் அமைக்கப்படும்.

### (iv)மாநகராட்சி பள்ளிகளில் குழுக்கள்



மாநகராட்சிப் பள்ளிகளில் கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகளில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் எனும் பெயர்களில் குழுக்களாகப் (Houses) பிரித்து அவர்களிடையே கலை நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி, விளையாட்டுப் போட்டி மற்றும் இதர கலை சார்ந்த போட்டிகள் நடத்தி மாநகராட்சிப் பள்ளிகள் அளவிலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலும் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற பயிற்சி வழங்கப்படும்.

### (v) பள்ளி மாணவ, மாணவியர்களின் இடையிலான போட்டிகள்



மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் தனித்திறனை வெளிக்கொணரும் விதமாக பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். இதனால், பிற பள்ளிகளில் பயிலும் மாணவர்களுடன் கலந்து தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வழிவகை ஏற்படும்.

### (vi) அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்



மாநகராட்சிப் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 38,638 மாணவ, மாணவியர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை மற்றும் பெல்ட் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

### (vii) விளையாட்டுத் திறன் மேம்பாடு



மாநகராட்சியில் உள்ள 28 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் திறனை மேம்படுத்துவதற்கு இந்நிதியாண்டில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளுக்கான சிலம்பம், சுருள் வீச்சு, வாள் வீச்சு போன்ற விளையாட்டுகளிலும், ஜூடோ, கராத்தே, டேக் வாண்டோ போன்ற Martial Arts விளையாட்டுகளில் ஆர்வமும், தகுதியும் உள்ள மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கென திறன் வாய்ந்த 5 பயிற்றுநர்களை தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ரூ.6 இலட்சம் செலவில் வருகின்ற கல்வியாண்டில் பயிற்சிகள் வழங்கப்படும்.

தேசிய அளவில் மற்றும் சர்வதேச அளவில் விளையாட்டு மற்றும் பிற துறைகளில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் விதமாக

அவர்களது பயண செலவு தங்குமிடம் உள்ளிட்ட செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாத்திய இசைக்குழு (Band Troup) அமையப்பெற்ற 3 பள்ளிகளில் ஒரு பயிற்சியாளர் (Band Instructor) தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து பயிற்சி வழங்கப்படும். இதற்கென ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (viii) காய்கறித் தோட்டம்



அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளில் காய்கறித் தோட்டம் அமைத்திடவும், அதில் விளையும் காய்கறிகளை அப்பள்ளிகளில் சத்துணவு சமைப்பதற்குப் பயன்படுத்திடவும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ix) பள்ளிகளில் பாதுகாப்பு

மாநகராட்சி 17 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 10 உயர்நிலைப் பள்ளிகளில் கண்காணிப்புக் கேமரா (CCTV) பொருத்தப்பட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இதற்கென ரூ.50 இலட்சம் மதிப்பில் மாநகராட்சி பள்ளிகளில் CCTV கேமராக்கள் பொறுத்தப்படும்.



### (x) பாதுகாக்கப்பட்ட குடிநீர்



மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சுகாதாரமான, சுத்தமான குடிநீர் வழங்கும் நடவடிக்கையில் அனைத்து பள்ளிகளிலும் நவீன குடிநீர் சுத்திகரிப்பு கருவி ரூ1.00 கோடி மதிப்பில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள நவீன சுத்திகரிப்பு கருவிகளை ரூ.20 இலட்சம் செலவில் வருகின்ற கல்வியாண்டில் பழுதுபார்த்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இதன்மூலம் அனைத்து மாநகராட்சி பள்ளிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதிப்படுத்தப்படும்.

### (xi) மக்களைத் தேடி நூலகம்

எண்ணங்களின் ஏணிப்படியாக வண்ணம் பல கொண்டு வடிவத்தில் வகை பலவாக உள்ளங்கையில் உலகத்தை ஏந்த உங்கள் இல்லங்களை தேடி இந்த நடமாடும் நூலகம்.

**“ இல்லத்தின் வாசலுக்கு வாருங்கள்**
**உள்ளத்தின் கதவுகளை திறக்க”**




ஓய்வின்றி உழைக்கும் உன்னத முதலமைச்சரின் சிந்தனைகளுக்கு வலிமை சேர்க்கும் விதமாக, **“உங்களைத் தேடி நூலகம்”** என்ற முன்னோடித் திட்டம் நமது மாநிலத்திலேயே முதன்முறையாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கென பிரத்யேகமாக ஒரு சிறப்பு வாகனம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் குளிர் சாதன வசதி, ஒளி– ஒலி அமைப்புகள், தடையில்லா மின்சார வசதி, வெளியில் அமர்ந்து படிப்பதற்கு இருக்கை

வசதிகள், ஏறத்தாழ 2500 புத்தகங்கள் கொண்ட புத்தக அலமாறிகள், இணையவழி நூலக மேலாண்மை வசதி, விரைவு தகவல் குறியீடு வசதி (QR CODE) ஆகிய அனைத்து விதமான வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்களைத் தேடி நூலகமானது பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பொது மக்கள் பயன்படும் வகையில் தினந்தோறும் பள்ளி வளாகங்கள், வணிக வளாகங்கள், பொது மக்கள் கூடும் முக்கிய பகுதிகள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் நடக்கும் இடங்களில் வந்து செல்லும். இதன் வெற்றியைக் கண்டு இந்நிதியாண்டில் மேலும் ஒரு வாகனம் ரூ.25 இலட்சம் செலவில் இயக்கப்படும்.

மேலும், இந்நிதியாண்டில் பயன்பாடின்றி உள்ள பல்வேறு நூலகங்கள் புனரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். தேவைப்படும் இடங்களில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும்.

### (xii) கணிதப் பூங்கா




மாணவர்கள் எளிதாக கணிதம் கற்க ஏதுவாக கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 83 ல் உள்ள வ.உ.சி பூங்கா வளாகத்தில் கணிதமேதை இராமானுஜர் பெயரில் **“இராமானுஜம் கணிதப் பூங்கா”** ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் அமைக்கப்படும்.

### (xiii) பள்ளிகளுக்கு புதிய மேஜை மற்றும் நாற்காலிகள் வாங்குதல்

கொரோனா பெருந்தொற்றுக்கு பின்னர், மாநகராட்சி பள்ளிகளில் சேரும் மாணவ, மாணவியர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாணவர்களின் கூடுதல் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளிகளில் பழுதடைந்த மேஜை நாற்காலிகள் மாற்றுவதற்கும் மற்றும் கூடுதலாக தேவைப்படும் நாற்காலிகள், புதிய மேஜைகள் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக பள்ளிகளுக்கு கொள்முதல் செய்யப்படும்.



### (xiv) கூடுதல் பள்ளிக்கட்டிடங்கள்

மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வித் திறனை மேம்படுத்த இந்நிதியாண்டில் தேவைக்கேற்ப ரூ. 25.00 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளும், கூடுதல் கட்டிடங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (xv) புதிய கணினிகள்

தற்பொழுது கணினி அறிவு என்பது மிகவும் இன்றியமையாததாக மாறிவிட்டது. மேலும், விரல் நுனியில் உலகத்தைக் கற்றுகொள்ள இது மிகவும் உதவியாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு பள்ளிகளில் தேவைக்கேற்ப புதியதாக கணினிகள் நிறுவ ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (xvi) நாப்கின் எரியூட்டும் இயந்திரங்கள் (Incinerator Machine)



அனைத்து மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவிகளின் ஆரோக்கியத்தை பேணும் வகையில் நாப்கின் எரியூட்டும் இயந்திரங்கள் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

### (xvii) அங்கன்வாடி புதுப்பித்தல்



மாநகராட்சி பகுதியில் மிகவும் பழுதடைந்துள்ள 40 எண்ணிக்கையிலான அங்கன்வாடி மையங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் முதற்கட்டமாக 20 எண்ணிக்கையிலான அங்கன்வாடிகள் ரூ. 4.00 கோடி மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டத்தில் புதுப்பிக்கப்பட்டு குழந்தைகள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

### (xviii) 100 விழுக்காடு மதிப்பெண்



மாநகராட்சிப் பள்ளிகளில் 12ம் வகுப்பு பயின்றுவரும் மாணவ மாணவியர்களில் பள்ளி இறுதிப் பொதுத்தேர்வில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெரும் மாணவ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5,000/– வழங்கப்படும். இதனால் மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வியில் மேலும் முனைப்புடன் ஈடுபட்டு பயன்பெறுவர்.

### (xix) சிறப்பான ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை



மாநகராட்சிப் பள்ளிகளில் 10 ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் வகுப்பின் ஆசிரியர்களுக்கு ரூ.5,000/– ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

## XI. மாமன்றப் பிரிவு

### (i) மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டுத் திட்டம்

மாமன்ற உறுப்பினர்களிடம் அவரவர் வார்டுகளில் உள்ள மக்கள் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே அதனை நிறைவேற்றும் வண்ணம் மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள **"மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம்"** அறிமுகப்படுத்தப்படும்.

ஒவ்வொரு மாமன்ற உறுப்பினருக்கும் தலா ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### (ii) தானியங்கி குறிப்பெடுத்தல் கருவி

பிரதிமாதம் நடைபெறும் மாமன்றக் கூட்டங்களின்போது, மாநகராட்சியில் வளர்ச்சிப் பணிகள் குறித்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்படும் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் சுருக்கெழுத்தர் மூலமாக பதிவு செய்யப்பட்டு, தமிழில் தட்டச்சு செய்யப்படுவதனால் ஏற்படும் கால தாமத்தை தவிர்க்கும் பொருட்டு உடனுக்குடன் தமிழில் தானியங்கி மூலம் தட்டச்சு செய்யப்படுவதற்கென பிரத்யேகமான மென்பொருள் கருவி மாமன்றக் கூட்ட அரங்கில் நிறுவப்படும்.

### (iii) மாமன்ற உறுப்பினர் விருது




2022–23 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, கோயம்புத்தூர் மாநகராட்சியில் மக்கள் பணியில் சிறப்பாக சேவை புரிந்த 10 மாமன்ற உறுப்பினர்களுக்கு குடியரசு தினவிழா நிகழ்ச்சியில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் சுதந்திர விழா நிகழ்ச்சியின்

போது வருகின்ற ஆண்டிலும் மாமன்ற உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையில், மாமன்ற கூட்டத்திற்கான வருகை, மாமன்றக் கூட்டத்தில் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் வழங்குதல், வார்டில் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து பெறுதல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சொத்துவரி உள்ளிட்ட வரிவசூலிப்புப் பணி, நமக்கு நாமே திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயலாக்கம், பொது ஒதுக்கீட்டு இடம் (OSR) மீட்பு மற்றும் பராமரிப்பு பணி உள்ளிட்ட பணிகளில் அவர்களின் பங்களிப்பு, பொது மக்களிடையேயுள்ள நன்மதிப்பு முதலிய செயல்பாடுகளின் அடிப்படையில் மாமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்து சிறந்த மாமன்ற உறுப்பினர் விருதுகள் வழங்கி பணித்திறன் மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### (iv) மாமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி

02.03.2022 அன்று புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மாமன்ற உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களுக்கு புத்தாக்கல் பயிற்சிகள் வழங்கி முழு ஈடுபாட்டுடன் மக்கள் சேவையில் ஈடுபட வழிவகை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### (v) மாண்புமிகு மேயர் விருப்ப நிதி

மக்கள் குறைதீர்க்கும் கூட்டங்களின் போதும், மாண்புமிகு மேயர் அவர்களின் கள ஆய்வின் போதும் பொதுமக்களால் தெரிவிக்கப்படும் குறைகளை சரி செய்யும் விதமாக **மாண்புமிகு மேயர் விருப்ப நிதி** இந்நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XII. பொது பிரிவு

### (i) மனிதவள மேம்பாடு

#### அ. மாநகராட்சி பணியாளர்களுக்கான பயிற்சி

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் துறைசார்ந்த பணிகள் தொடர்பாக பயிற்சி அளித்து பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி அளிக்க இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இம்மாநகராட்சியில் பணிபுரியும் சுமார் 2300 நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சி அளிக்க இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

#### ஆ. பணியாளர் நலன் சார்ந்த செலவினம்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யக் கோரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய மாநகராட்சியில் தற்போது போதிய குடியிருப்புகள் இல்லாத நிலையில், மாநகராட்சி பணியாளர்களின் நலன் காக்கும் பொருட்டு குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏதுவான மாநகராட்சிக்கு சொந்தமான இடங்கள் கண்டறியப்பட்டு அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைத்து பணியாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்த வாடகை அடிப்படையில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி குடியிருப்புகளில் பழுதடைந்துள்ள 12 வீடுகள் இந்நிதியாண்டில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### இ. குளிர்சாதன வசதியுடன் கூட்டரங்கம்

மாநகராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிந்து வரும் மருத்துவப்பணியாளர்கள் மற்றும் மருத்துவம் அல்லாத பணியாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் ஆய்வுகூட்டங்கள் நடத்துவதற்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் 200 பேர் அமரக்கூடிய குளிர்சாதன வசதியுடன் கூட்டரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### ஈ. ஓய்வூதியதாரர் நலன்

மாநகராட்சியின் வளர்ச்சிக்கு இரவு பகல் பாராமல் உழைத்து ஓய்வு பெற்ற பணியாளர்களது குடும்பத்தினரின் நலனில் கோவை மாநகராட்சி மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற, காலமான பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நீண்ட நாட்களாக ஓய்வூதிய நிலுவை இருந்து வந்தது. 2022–2023 ம் நிதியாண்டில் நிலுவையில் இருந்த ரூ. 13.20 கோடி மற்றும் நடப்பு தேதி வரை 211 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ. 29.00 கோடி ஓய்வூதிய பணப்பயன்கள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களின் 2915 பணிப்பதிவேடுகள் சிதிலமடைந்து வருவதைக் கருத்திற்கொண்டும், மேலும் 5018 ஓய்வூதியதாரர்களது பதிவுகள் அடங்கிய 80 பேரேடுகளையும் **“எல்காட்”** நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஸ்கேன் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு 321775 பக்கங்கள் ஸ்கேன் செய்து பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வருங்காலத்தில் ஓய்வூதியதாரர்களின் பணிப்பதிவேடு மற்றும் பணியமைப்பு தணிக்கைப் பதிவேடுகளின் பதிவுகளை ஆய்வு செய்ய ஏதுவாக அமையும். இதனால் ஓய்வூதியதாரர்களுக்கு விரைவான சேவை அளிக்க இயலும்.

மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 2022–2023ம் நிதியாண்டில் நிலுவையில் இருந்த ரூ.10.54 கோடியுடன் சேர்த்து நடப்பு தேதிவரை ரூ.16.41 கோடி மாநகராட்சியின் நிர்வாக பங்கீட்டுத் தொகை முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது.

**(ii) விருதுகள்:**



கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் வளர்ச்சிப் பணிகள், 24 மணி நேர குடிநீர் திட்டப்பணிகள், சிறந்த பள்ளிகள் மற்றும் கொடிநாள் வசூலில் இலக்கை விட கூடுதலாக வசூல் செய்தது போன்ற செயல்களைப் பாராட்டி ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட பல்வேறு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

- 26.01.2023 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டில் கொடிநாள் நிதிவசூலில் இலக்கை விட கூடுதலாக எய்தியமைக்கு ஆணையாளருக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது.
- ஒன்றிய அரசு சார்பில் 09.12.2022 அன்று அஸ்ஸாம் மாநிலம், கௌகாத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 24 மணி நேர குடிநீர் திட்டப்பணிகளில் மின் ஆளுமையை முன்னெடுத்து சிறப்பாக செயல்படுத்தியதற்காக விருது வழங்கப்பட்டது.
- சென்னையில் 08.03.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தில்

சமூகக் கழிப்பறை / பொதுக் கழிப்பறையில் QR கோடு பயன்படுத்தி உபயோகிக்கும் முறையினை 2022ம் ஆண்டில் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

- 24மணி நேர குடிநீர் திட்டப் பணிகளில் "சிறந்த புவியியல் தகவல் பயன்பாடு செயலி" கண்காணிப்பிற்கென விருது வழங்கப்பட்டுள்ளது.



2020–2021ம் கல்வியாண்டுக்கான சிறந்த பள்ளிகள் பட்டியலில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பாப்பநாயக்கன் பாளையம் நடுநிலைப்பள்ளி, ஷாஜகான் நகர் நடுநிலைப்பள்ளி ஆகிய இருபள்ளிகள் சிறந்த பள்ளிகளாக தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் 05.12.2022 அன்று விருதுகள் வழங்கப்பட்டது.

# பொதுநிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக்கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

ரூ. கோடியில்

| விபரம் | குறியீடு | பொது நிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்பக் கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வரவினம் (வருவாய்)** | | | | | |
| வருவாய் வரியினங்கள் | 110 | 294.51 | 124.50 | 84.25 | 503.26 |
| ஒப்படைக்கப் பெறும் வருவாய் | 120 | 65.00 | 0.00 | 0.00 | 65.00 |
| குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 130 | 45.52 | 0.00 | 0.00 | 45.52 |
| சேவைக் கட்டணம் மற்றும் இதர கட்டணம் | 140 | 103.40 | 188.02 | 0.00 | 291.42 |
| விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 150 | 3.83 | 0.00 | 0.00 | 3.83 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 240.00 | 54.00 | 0.00 | 294.00 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 3.40 | 0.70 | 1.00 | 5.10 |
| வட்டி மூலம் வருவாய் | 171 | 2.90 | 1.40 | 0.00 | 4.30 |
| இதர வருவாய் | 180 | 50.00 | 2.00 | 2.26 | 54.26 |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 12.12 | 0.00 | 0.00 | 12.12 |
| **மொத்தம் – வருவாய் வரவினம்** | | **820.68** | **370.62** | **87.51** | **1,278.81** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 432.68 | 675.76 | 0.00 | 1,108.44 |
| கடன்கள் | 330 | 144.75 | 451.69 | 0.00 | 596.44 |
| இதர வரவினம் | 350 | 31.04 | 0.00 | 0.00 | 31.04 |
| முன்பணம் | 460 | 3.75 | 0.42 | 0.00 | 4.17 |
| **மொத்தம் – மூலதன வரவினம்** | | **612.22** | **1,127.87** | **0.00** | **1,740.09** |
| **மொத்த வருவாய் வரவினம் (ம) மூலதன வரவினம்** | | **1,432.90** | **1,498.49** | **87.51** | **3,018.90** |






ரூ. கோடியில்

| விபரம் | குறியீடு | பொது நிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்பக் கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **செலவினம் (வருவாய்)** | | | | | |
| நிறுவனச் செலவுகள் | 210 | 271.64 | 12.45 | 0.15 | 284.24 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 24.57 | 4.93 | 0.40 | 29.90 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 352.98 | 213.26 | 15.80 | 582.04 |
| வட்டி மற்றும் நிதிச் செலவுகள் | 240 | 3.82 | 41.22 | 0.00 | 45.04 |
| திட்டச் செலவுகள் | 250 | 0.10 | 0.00 | 0.00 | 0.10 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 48.50 | 0.00 | 0.00 | 48.50 |
| **மொத்தம் – வருவாய் செலவினம்** | | **701.61** | **271.86** | **16.35** | **989.82** |
| **செலவினம் (மூலதனம்)** | | | | | |
| முதலீடுகள் வைப்புத் தொகை | 320 | 10.00 | 5.00 | 0.00 | 15.00 |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 330 | 60.94 | 50.06 | 0.00 | 111.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 27.59 | 24.00 | 0.00 | 51.59 |
| நிலையான சொத்துகள் | 410 | 630.57 | 1,198.20 | 28.00 | 1,856.77 |
| குறிப்பிட்ட திட்டங்கள் | 412 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| முன்பணம் | 460 | 4.56 | 0.33 | 0.00 | 4.89 |
| **மொத்தம் – மூலதன செலவினம்** | | **733.66** | **1,277.59** | **28.00** | **2,039.25** |
| **மொத்த வருவாய் செலவினம் (ம) மூலதன செலவினம்** | | **1,435.27** | **1,549.45** | **44.35** | **3,029.07** |
| **உபரி / (பற்றாக்குறை)** | | **(2.37)** | **(50.96)** | **43.16** | **(10.17)** |






# பொது நிதி

## வரவினம் மற்றும் செலவினம் சுருக்கம்

ரூ. கோடியில்

| விபரம் | குறியீடு | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|
| பொது நிதி | | | | | |
| **வரவினம் (வருவாய்)** | | | | | |
| வருவாய் வரியினங்கள் | 110 | 144.57 | 178.03 | 243.58 | 294.51 |
| ஒப்படைக்கப் பெறும் வருவாய் | 120 | 43.06 | 56.00 | 58.64 | 65.00 |
| குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 130 | 25.91 | 51.20 | 38.76 | 45.52 |
| சேவைக் கட்டணம் மற்றும் இதர கட்டணம் | 140 | 71.64 | 70.70 | 83.06 | 103.40 |
| விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 150 | 1.38 | 2.60 | 1.25 | 3.83 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 116.37 | 150.00 | 187.73 | 240.00 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 2.79 | 0.43 | 3.30 | 3.40 |
| வட்டி மூலம் வருவாய் | 171 | 3.77 | 0.38 | 2.74 | 2.90 |
| இதர வருவாய் | 180 | 22.17 | 50.00 | 30.31 | 50.00 |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 26.52 | 12.02 | 6.23 | 12.12 |
| **மொத்தம் – வருவாய் வரவினம் – பொது நிதி** | | **458.18** | **571.36** | **655.60** | **820.68** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 242.02 | 440.97 | 314.38 | 432.68 |
| கடன்கள் | 330 | 26.62 | 0.00 | 12.50 | 144.75 |
| இதர வரவினம் | 350 | 56.47 | 50.18 | 91.87 | 31.04 |
| முன்பணம் | 460 | 3.59 | 3.50 | 3.57 | 3.75 |
| **மொத்தம் – மூலதன வரவினம் – பொது நிதி** | | **328.70** | **494.65** | **422.32** | **612.22** |
| **மொத்த வருவாய் (ம) மூலதன வரவினம் – பொது நிதி** | | **786.88** | **1,066.01** | **1,077.92** | **1,432.90** |

ரூ. கோடியில்

| விபரம் | குறியீடு | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|
| **செலவினம் (வருவாய்)** | | | | | |
| நிறுவனச் செலவுகள் | 210 | 207.74 | 235.50 | 279.54 | 271.64 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 18.55 | 22.15 | 41.62 | 24.57 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 221.41 | 234.62 | 222.71 | 352.98 |
| வட்டி மற்றும் நிதிச் செலவுகள் | 240 | 3.12 | 2.45 | 2.62 | 3.82 |
| திட்டச் செலவுகள் | 250 | 5.56 | 0.00 | 1.42 | 0.10 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 0.00 | 1.00 | 0.00 | 0.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 0.00 | 32.35 | 0.00 | 48.50 |
| **மொத்தம் – வருவாய் செலவினம் – பொது நிதி** | | **456.38** | **528.07** | **547.91** | **701.61** |
| **செலவினம் (மூலதனம்)** | | | | | |
| முதலீடுகள் வைப்புத் தொகை | 320 | 87.28 | 5.43 | 40.10 | 10.00 |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 330 | 69.80 | 31.24 | 54.55 | 60.94 |
| இதர பொறுப்புகள் | 350 | 14.68 | 17.94 | 89.01 | 27.59 |
| நிலையான சொத்துகள் | 410 | 194.40 | 501.05 | 303.30 | 630.57 |
| குறிப்பிட்ட திட்டங்கள் | 412 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| முன்பணம் | 460 | 3.49 | 4.51 | 4.04 | 4.56 |
| **மொத்தம் – மூலதன செலவினம் – பொது நிதி** | | **369.65** | **560.17** | **491.00** | **733.66** |
| **மொத்த வருவாய் (ம) மூலதன செலவினம் – பொது நிதி** | | **826.03** | **1,088.24** | **1,038.91** | **1,435.27** |
| **உபரி / (பற்றாக்குறை) – பொது நிதி** | | **(39.15)** | **(22.23)** | **39.01** | **(2.37)** |

# பொது நிதி

ரூ. கோடியில்

| கணக்கு எண். | பிரதான தலைப்பு | கணக்கு தலைப்பு விவரங்கள் | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|---|
| **வரவினங்கள் (வருவாய்)** | | | | | | |
| **வரியின வருவாய்** | | | | | | |
| 91-110-01-01 | 110 | சொத்து வரி – குடியிருப்பு | 39.18 | 46.54 | 74.34 | 82.63 |
| 91-431-10-06 | 110 | சொத்துவரி வசூலிக்கத்தக்கது – குடியிருப்பு – நிலுவை | 5.31 | 7.73 | 9.70 | 13.70 |
| 91-110-01-03 | 110 | சொத்து வரி – நிறுவனங்கள் | 5.43 | 6.00 | 8.91 | 10.39 |
| 91-431-10-08 | 110 | சொத்துவரி வசூலிக்கத்தக்கது – நிறுவனங்கள் – நிலுவை | 0.47 | 1.16 | 1.10 | 1.85 |
| 91-110-01-02 | 110 | சொத்து வரி – வணிகம் | 31.66 | 36.59 | 72.07 | 80.23 |
| 91-431-10-07 | 110 | சொத்துவரி வசூலிக்கத்தக்கது – வணிகம் – நிலுவை | 12.01 | 11.69 | 14.16 | 20.19 |
| 91-110-01-04 | 110 | சொத்து வரி – காலியிடம் | 3.20 | 3.85 | 6.01 | 12.87 |
| 91-431-10-09 | 110 | சொத்துவரி வசூலிக்கத்தக்கது – காலியிடம் – நிலுவை | 9.46 | 21.47 | 12.65 | 21.65 |
| | | **மொத்தம் – 110 (1)** | **106.72** | **135.03** | **198.94** | **243.51** |
| 94-110-10-01 | 110 | தொழில் வரி | 28.15 | 31.00 | 29.57 | 36.00 |
| 94-431-19-04 | 110 | தொழில்வரி – வசூலிக்கத்தக்கது – நிலுவை | 9.70 | 12.00 | 15.07 | 15.00 |
| | | **மொத்தம் – 110 (2)** | **37.85** | **43.00** | **44.64** | **51.00** |
| | | **பெரு மொத்தம் – 110 (1 + 2)** | **144.57** | **178.03** | **243.58** | **294.51** |
| **ஒப்படைக்கப்பெறும் வருவாய்** | | | | | | |
| 98-120-10-01 | 120 | சொத்து மாற்றங்களுக்குரிய வரி | 40.09 | 50.00 | 50.12 | 55.00 |
| 98-120-10-02 | 120 | கேளிக்கை வரி | 2.97 | 6.00 | 8.52 | 10.00 |
| | | **மொத்தம் – 120** | **43.06** | **56.00** | **58.64** | **65.00** |
| **குத்தகை மற்றும் வாடகை வருவாய் இனங்கள்** | | | | | | |
| 83-130-10-06 | 130 | பேருந்து நிலையக் கட்டணம் | 0.31 | 0.37 | 0.28 | 0.50 |
| 58-130-10-01 | 130 | வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் – வாடகை | 17.82 | 30.00 | 19.12 | 22.54 |
| 55-130-10-02 | 130 | சமுதாயக் கூடம் – வாடகை | 0.20 | 0.30 | 0.35 | 0.37 |
| 58-130-10-03 | 130 | சந்தைக் கட்டணம் – தினசரி சந்தை | 2.24 | 2.91 | 3.36 | 3.46 |
| 58-130-10-04 | 130 | சந்தைக் கட்டணம் – வாரச் சந்தைகள் | 0.28 | 0.54 | 0.14 | 0.33 |
| 83-130-10-07 | 130 | வண்டிப்பேட்டை / லாரி பேட்டை / வாடகைக் கார்கள் நிறுத்துமிடக் கட்டணம் | - | - | - | - |
| 06-130-20-01 | 130 | கட்டிட வாடகை – பணியாளர் குடியிருப்பு | 0.40 | 0.40 | 0.67 | 0.74 |
| 06-130-40-01 | 130 | நில வாடகை மற்றும் குத்தகைக் கட்டணம் | 0.15 | 0.50 | 0.16 | 0.16 |
| 42-130-80-05 | 130 | கட்டணக் கழிப்பிடங்கள் கட்டணம் | 0.80 | 1.50 | 0.82 | 1.35 |
| 83-130-80-03 | 130 | வாகனங்கள் நிறுத்துமிடக் கட்டணம் | 1.03 | 1.50 | 1.12 | 1.15 |
| 90-130-80-07 | 130 | கேபிள் டி.வி, கண்ணாடி இழை கேபிள் கட்டணம் | 1.33 | - | 1.35 | 1.50 |
| 90-130-80-07 (1) | 130 | திடக்கழிவு மேலாண்மைக் கட்டணம் | 1.35 | 13.18 | 11.39 | 13.42 |
| | | **மொத்தம் – 130** | **25.91** | **51.20** | **38.76** | **45.52** |

ரூ. கோடியில்

| கணக்கு எண். | பிரதான தலைப்பு | கணக்கு தலைப்பு விவரங்கள் | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|---|
| **சேவைக் கட்டணம் மற்றும் இதர கட்டணம்** | | | | | | |
| 02-140-13-01 | 140 | நகல்களுக்கான விண்ணப்பக் கட்டணம் | 0.39 | 1.00 | 0.40 | 0.41 |
| 02-140-20-01 | 140 | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான அபராதக் கட்டணம் | 0.04 | 0.10 | 0.03 | 0.04 |
| 02-140-40-07 | 140 | இதரக் கட்டணம் | 1.05 | 0.70 | 1.18 | 1.21 |
| 02-140-40-07 (1) | 140 | இதரக் கட்டணம் (சொத்து வரி பெயர் மாற்றக் கட்டணம்) | 3.20 | 7.00 | 4.52 | 7.00 |
| 02-140-80-03 | 140 | பல்வகை பிடித்தங்கள் | 0.28 | 0.45 | 0.98 | 0.01 |
| 11-140-40-02 | 140 | நில அளவைக் கட்டணம் | 0.08 | 0.09 | 0.10 | 0.12 |
| 12-140-11-03 | 140 | கட்டிட உரிமக் கட்டணம் | 21.28 | 24.50 | 24.08 | 30.00 |
| 12-140-14-03 | 140 | அபிவிருத்திக் கட்டணம் | 24.59 | 13.50 | 28.06 | 35.00 |
| 11-140-15-01 | 140 | ஆக்கிரமிப்புக் கட்டணம் | - | - | - | - |
| 12-140-14-04 | 140 | மனை உட்பிரிவு கட்டணம் | 0.03 | 0.05 | 0.07 | 0.08 |
| 12-140-40-04 | 140 | ஒப்பந்ததாரர்கள்/பிளம்பர்கள்/ கட்டிட பட வரைவாளர்கள் புதுப்பித்தல் கட்டணம் | - | 0.15 | 0.09 | 0.10 |
| 11-140-15-02 | 140 | கட்டிட இடிபாடுகள் (அனுமதியின்றி கட்டும் கட்டிடங்கள் உட்பட) அகற்றும் கட்டணம் | 9.02 | 10.07 | 9.06 | 9.84 |
| 12-140-70-18 | 140 | கட்டிட அனுமதி விண்ணப்பக் கட்டணம் | - | 0.03 | - | - |
| 21-140-70-01 | 140 | மின்துறையால் சாலையோரங்களில் தோண்டப்படும் குழிகளை சீரமைப்பதற்கான கட்டணம் | 2.73 | 2.50 | 2.76 | 2.83 |
| 30-140-11-01 | 140 | தொழில் உரிமக் கட்டணம் | 4.43 | 5.50 | 5.84 | 10.00 |
| 37-140-13-02 | 140 | பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் கட்டணம் | 0.23 | 0.25 | 0.29 | 0.32 |
| 42-140-50-07 | 140 | மின்மயானக் கட்டணம் | 0.11 | 0.25 | 0.12 | 0.12 |
| 42-140-50-08 | 140 | குப்பைகள் / கட்டிட இடிபாடுகள் அகற்றுவதற்கான கட்டணம் | 1.78 | 1.60 | 1.82 | 1.87 |
| 45-140-11-04 | 140 | ஆடு வதைக் கட்டணம் | 0.42 | 0.45 | 0.42 | 0.47 |
| 61-140-60-01 | 140 | தோட்டம், பூங்காக்கள் மூலம் வரவு | 0.06 | 0.04 | 0.19 | 0.32 |
| 61-140-60-03 | 140 | நீச்சல் குளங்கள் மூலம் வரவு | - | 0.09 | - | - |
| 90-140-60-04 | 140 | நூலக வரி வரவினம் (10% நூலக வரி மீதான வசூல்) | 1.83 | 2.24 | 2.86 | 3.45 |
| 93-140-40-01 | 140 | விளம்பரக் கட்டணம் | 0.09 | 0.14 | 0.19 | 0.21 |
| | | **மொத்தம் – 140** | **71.64** | **70.70** | **83.06** | **103.40** |
| **விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம்** | | | | | | |
| 64-150-12-03 | 150 | இதர விற்பனைகள் மூலம் வரவு | 0.82 | 0.17 | 0.50 | 0.50 |
| 41-150-10-02 | 150 | பயனற்ற மற்றும் கழிவுப் பொருள்கள் விற்பனை | - | 2.00 | 0.01 | 0.01 |
| 42-150-10-03 | 150 | அம்மா உணவகம் – உணவுகள் மூலம் வரவு | 0.56 | 0.43 | 0.74 | 0.82 |
| 42-150-40-01 | 150 | வாடகைக் கட்டணம் | - | - | - | 2.50 |
| | | **மொத்தம் – 150** | **1.38** | **2.60** | **1.25** | **3.83** |
| **வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை** | | | | | | |
| 03-160-10-04 | 160 | மாநில நிதிக்குழு மானியம் | 116.37 | 150.00 | 187.73 | 240.00 |
| | | **மொத்தம் – 160** | **116.37** | **150.00** | **187.73** | **240.00** |

ரூ. கோடியில்

| கணக்கு எண். | பிரதான தலைப்பு | கணக்கு தலைப்பு விவரங்கள் | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|---|
| **முதலீடுகள் மீதான வருவாய்** | | | | | | |
| 03-170-80-01 | 170 | முதலீடுகள் மீதான வருவாய் | 2.79 | 0.43 | 3.30 | 3.40 |
| | | **மொத்தம் – 170** | **2.79** | **0.43** | **3.30** | **3.40** |
| **வட்டி மூலம் வருவாய்** | | | | | | |
| 03-171-10-01 | 171 | சேமிப்பு கணக்கு மீதான வங்கி வட்டி | 3.77 | 0.38 | 2.74 | 2.90 |
| | | **மொத்தம் – 171** | **3.77** | **0.38** | **2.74** | **2.90** |
| **இதர வருவாய்** | | | | | | |
| 03-170-80-01 | 180 | இதர வருவாய் | 22.17 | 50.00 | 30.31 | 50.00 |
| | | **மொத்தம் – 180** | **22.17** | **50.00** | **30.31** | **50.00** |
| **மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு** | | | | | | |
| 03-320-20-01 | 320 | குடும்ப நல மானியம் (பணியாளர்) மற்றும் மதிய உணவு மானியம் | 5.83 | 7.56 | 2.85 | 7.22 |
| 03-320-20-01 (1) | 320 | உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் – 2022 நிதி (சிசிடிவி) | 0.58 | - | - | - |
| 03-320-20-01 (2) | 320 | திட்ட செயல்பாட்டு மானியம் – தெருவோர வியாபாரிகள் | 0.06 | - | 0.25 | 0.40 |
| 03-320-20-01 (3) | 320 | திட்ட செயல்பாட்டு மானியம் – நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் | - | 1.46 | 1.45 | 1.50 |
| 03-320-20-01 (4) | 320 | திட்ட செயல்பாட்டு மானியம் OSR | 20.05 | 3.00 | 1.68 | 3.00 |
| | | **மொத்தம் – 320** | **26.52** | **12.02** | **6.23** | **12.12** |
| | | **மொத்தம் வரவினம் (வருவாய்)** | **458.18** | **571.36** | **655.60** | **820.68** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | | |
| **மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு** | | | | | | |
| 03-320-10-01 | 320 | திறன்மிகு நகரம் திட்டம் – மத்திய மற்றும் மாநில அரசு நிதி | 161.78 | 208.42 | 145.90 | 104.61 |
| 03-320-20-02 | 320 | திட்டங்களுக்கான மானிய நிதிகள் | 22.05 | 140.75 | 94.26 | 159.19 |
| 03-320-20-02 | 320 | ஆசியன் வளர்ச்சி வங்கி மானியம் (Solar Energy Scheme) | 1.16 | 14.15 | 11.64 | 0.71 |
| 03-320-30-02 | 320 | மத்திய நிதிக் குழு மானியம் (CFC) | 45.00 | 51.16 | 34.75 | 101.12 |
| 03-320-30-02 | 320 | நமக்கு நாமே திட்டம் | 0.42 | 1.51 | 6.11 | 8.55 |
| 03-320-30-02 | 320 | அரசு நிதி – செங்குளம் அடிப்படை வசதிகள் மேம்பாடு | - | 14.48 | 14.48 | 5.00 |
| 03-320-30-02 | 320 | கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதி (CSR) | 2.26 | - | 3.98 | 5.00 |
| 03-320-30-02 | 320 | செம்மொழி பூங்கா | - | - | - | 43.00 |
| 03-320-80-02 | 320 | நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 0.12 | 0.50 | 0.36 | 0.50 |
| 03-320-80-03 | 320 | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 9.23 | 10.00 | 2.90 | 5.00 |
| | | **மொத்தம் – 320** | **242.02** | **440.97** | **314.38** | **432.68** |

ரூ. கோடியில்

| கணக்கு எண். | பிரதான தலைப்பு | கணக்கு தலைப்பு விவரங்கள் | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|---|
| **கடன்கள்** | | | | | | |
| 03-330-30-01 | 330 | தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதி – உலக வங்கி நிதி (சாலை திட்டங்கள்) | - | - | 7.81 | 0.81 |
| 03-330-30-01 | 330 | நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் | - | - | 4.69 | 81.60 |
| 03-330-30-01 | 330 | தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி – செம்மொழி பூங்கா | - | - | - | 43.00 |
| 03-330-30-01 | 330 | நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் – 2022 | 6.62 | - | - | - |
| 03-330-30-01 | 330 | நகராட்சி நிர்வாக இயக்குனரகம் – முன்பணம் | 20.00 | - | - | - |
| 03-330-30-01 | 330 | தெருவிளக்குகள் பராமரிப்புக் கடன் | - | - | - | 19.34 |
| | | **மொத்தம் – 330** | **26.62** | **-** | **12.50** | **144.75** |
| **இதர வரவினம்** | | | | | | |
| 03-350-30-02 | 350 | நூலகவரி வசூல் செய்தது | 16.51 | 20.18 | 31.37 | 31.04 |
| 03-350-30-02 | 350 | செலவிடப்படாத திட்டப்பணிகளுக்கான மான்ய தொகைகள் | - | - | 60.50 | - |
| 03-350-30-02 | 350 | முதிர்வடைந்த முதலீடுகள் – சங்கனூர் பள்ளம் | 39.96 | 30.00 | - | - |
| | | **மொத்தம் – 350** | **56.47** | **50.18** | **91.87** | **31.04** |
| **முன்பணம் – வரவினம்** | | | | | | |
| 04-460-10-01 | 460 | பண்டிகை முன்பணம் | 2.99 | 2.97 | 3.18 | 3.25 |
| 04-460-10-09 | 460 | திருமண முன்பணம் | - | - | 0.01 | - |
| 04-460-10-10 | 460 | வீடுகட்டும் முன்பணம் | 0.60 | 0.53 | 0.38 | 0.50 |
| | | **மொத்தம் – 460** | **3.59** | **3.50** | **3.57** | **3.75** |
| | | **மொத்த வரவினம் (மூலதனம்)** | **328.70** | **494.65** | **422.32** | **612.22** |
| | | **மொத்த வரவினம் (வரவினம் +மூலதனம்)** | **786.88** | **1,066.01** | **1,077.92** | **1,432.90** |
| **செலவினம் (வருவாய்)** | | | | | | |
| **பணியமைப்புச் செலவுகள்** | | | | | | |
| 00-210-10-01 | 210 | ஊதியச் செலவுகள் | 140.13 | 154.52 | 165.12 | 172.00 |
| 00-210-20-04 | 210 | சீருடை விநியோகம் | 0.60 | 0.36 | 0.60 | 0.80 |
| 00-210-20-06 | 210 | பயிற்சி செலவுகள் | 0.09 | 0.50 | 0.02 | 0.50 |
| 00-210-20-07 | 210 | பணியாளர் நல செலவினம் | 0.15 | 0.68 | 0.11 | 0.50 |
| 00-210-20-10 | 210 | மருத்துவக் காப்பீட்டிற்கான பங்களிப்புத் தொகை | 0.84 | - | 0.49 | - |
| 00-210-20-10 - 1 | 210 | பங்களிப்புத் தொகை – நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை TNIUS | 0.04 | 0.04 | 0.21 | 0.04 |
| 00-210-20-14 | 210 | குழுக் காப்பீட்டுத் திட்டத்திற்கான பங்களிப்புத் தொகை | 1.04 | 1.10 | 0.96 | 1.00 |
| 00-210-20-15 | 210 | பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் – மாநகராட்சி பங்கு தொகை | 3.49 | 7.50 | 17.13 | 7.80 |
| 02-210-30-01 | 210 | ஓய்வூதியம் | 50.20 | 57.00 | 65.15 | 57.00 |
| 02-210-30-02 | 210 | குடும்ப ஓய்வூதியம் | 3.41 | 3.00 | 6.25 | 3.00 |
| 02-210-30-04 | 210 | தொகுப்பு ஓய்வூதியம் | 2.07 | 3.00 | 4.95 | 8.00 |

ரூ. கோடியில்

| கணக்கு எண். | பிரதான தலைப்பு | கணக்கு தலைப்பு விவரங்கள் | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|---|
| 02-210-30-06 | 210 | ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை அயற்பணியாளர்கள் | - | 0.30 | - | - |
| 02-210-40-01 | 210 | விடுப்பிற்கான ஊதியம் | 2.42 | 3.50 | 9.32 | 10.00 |
| 02-210-40-02 | 210 | இறப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை | 3.26 | 4.00 | 9.23 | 11.00 |
| | | **மொத்தம் – 210** | **207.74** | **235.50** | **279.54** | **271.64** |
| **நிர்வாகச் செலவுகள்** | | | | | | |
| 02-220-12-01 | 220 | தொலைபேசிக் கட்டணம் | 0.29 | 0.30 | 0.34 | 0.40 |
| 02-220-12-03 | 220 | அஞ்சல், தந்தி, நிகரி செலவுகள் | 0.05 | 0.07 | 0.05 | 0.06 |
| 02-220-20-01 | 220 | புத்தகங்கள், நாளிதழ்கள் – செலவினம் | 0.02 | 0.02 | 0.04 | 0.13 |
| 02-220-21-01 | 220 | எழுது பொருட்கள் – அச்சு செலவுகள் | 1.70 | 4.00 | 2.44 | 3.00 |
| 02-220-21-01 -1 | 220 | எழுது பொருட்கள் – அச்சு செலவுகள் – திறன்மிகு நகரம் | 0.10 | - | - | 0.05 |
| 02-220-30-02 | 220 | வாகனச் செலவினங்கள் | 0.01 | 0.02 | 0.62 | 0.65 |
| 02-220-30-02 - 1 | 220 | வாகனச் செலவினங்கள் – திறன்மிகு நகரம் | - | 0.01 | 0.06 | 0.07 |
| 02-220-30-01 | 220 | பயணச் செலவுகள் | 0.07 | 0.54 | 0.53 | 0.55 |
| 02-220-30-01 - 1 | 220 | பயணச் செலவுகள் – திறன்மிகு நகரம் | 0.31 | - | - | 0.15 |
| 02-220-30-04 | 220 | மாமன்ற பிரிவு பயண (ம) பயிற்சி செலவுகள் | - | 0.50 | 0.01 | 0.50 |
| 02-220-51-04 | 220 | சட்ட செலவினம் | 0.51 | 0.50 | 0.62 | 0.65 |
| 02-220-51-04 - 1 | 220 | சட்ட செலவினம்– திறன்மிகு நகரம் | 0.04 | - | - | 0.05 |
| 02-220-52-03 | 220 | வல்லுநர் கட்டணம் | 1.96 | 2.50 | 0.95 | 1.00 |
| 02-220-52-03 - 1 | 220 | வல்லுநர் கட்டணம் – திறன்மிகு நகரம் | 4.04 | - | 2.61 | 0.10 |
| 02-220-60-01 | 220 | விளம்பரக் கட்டணம் | 1.52 | 1.50 | 1.65 | 1.72 |
| 02-220-60-01 - 1 | 220 | விளம்பரக் கட்டணம் – திறன்மிகு நகரம் | - | - | - | 0.03 |
| 02-220-80-03 | 220 | இதர செலவினங்கள் | 2.45 | 1.50 | 4.00 | 4.10 |
| 02-220-80-03 - 1 | 220 | இதர செலவினங்கள் – அம்மா உணவகம் | 1.41 | 3.00 | 2.51 | 3.24 |
| 02-220-80-03 - 2 | 220 | இதர செலவினங்கள் – ஆதரவற்றோர் தங்கும் விடுதிகள் | 0.20 | 0.50 | 0.30 | 0.30 |
| 02-220-80-03 - 3 | 220 | இதர செலவினங்கள் – திறன்மிகு நகரம் | - | 0.03 | - | - |
| 01-220-80-04 | 220 | மாமன்ற உறுப்பினர்கள் அமர்வுக் கட்டணம் | 0.01 | 0.10 | 0.06 | 0.10 |
| 02-220-10-04 | 220 | வாகனங்கள் மீதான வரி – பொது | 0.10 | 0.10 | 0.10 | 0.15 |
| 02-220-11-01 | 220 | கட்டிடங்களுக்கான மின் கட்டணம் | 0.09 | 0.75 | 0.43 | 0.75 |
| 02-220-11-01 - 1 | 220 | கட்டிடங்களுக்கான மின் கட்டணம் (மாநில பகிர்மான நிதி) | - | - | 19.00 | - |
| 02-220-11-05 | 220 | கணிப்பொறி இயக்கச் செலவுகள் | 1.69 | 4.00 | 3.34 | 4.00 |
| 02-220-11-05 - 1 | 220 | கணிப்பொறி இயக்கச் செலவுகள் – திறன்மிகு நகரம் | 0.03 | - | - | - |
| 02-220-40-01 | 220 | வாகனங்கள் – காப்பீடு கட்டணம் | 1.06 | 1.20 | 1.08 | 1.30 |
| 03-220-50-01 | 220 | தணிக்கைக் கட்டணம் | 0.79 | 0.60 | 0.50 | 1.12 |
| 02-220-60-02 | 220 | விருந்து உபசார செலவினங்கள் | 0.10 | 0.36 | 0.38 | 0.40 |
| 02-220-10-01 | 220 | கட்டிடங்கள் – வாடகைத் தொகை | - | 0.05 | - | - |
| | | **மொத்தம் – 210** | **18.55** | **22.15** | **41.62** | **24.57** |

ரூ. கோடியில்

| கணக்கு எண். | பிரதான தலைப்பு | கணக்கு தலைப்பு விவரங்கள் | உள்ளபடி வரவு – செலவு (2021–2022) | திட்ட மதிப்பீடு (2022–2023) | திருத்திய திட்ட மதிப்பீடு (2022–2023) | திட்ட மதிப்பீடு (2023–2024) |
|---|---|---|---|---|---|---|
| **இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்** | | | | | | |
| 02-230-80-07 | 230 | திறப்பு விழாச் செலவுகள் | - | 0.10 | 0.04 | 0.05 |
| 02-230-80-16 | 230 | காலாவதியான வைப்புத் தொகை திரும்ப வழங்கியது | - | 1.00 | 1.58 | 2.00 |
| 02-230-80-19 | 230 | அம்மா உணவகம் பராமரிப்பு | 1.92 | 0.50 | 1.62 | 1.57 |
| 21-230-50-01 | 230 | சிமெண்ட் சாலைகள் பராமரிப்பு – பழுது பார்த்தல் | 0.63 | 3.15 | 1.05 | 2.00 |
| 21-230-50-02 | 230 | தார் சாலைகள் பராமரிப்பு – பழுது பார்த்தல் | 0.59 | 8.00 | 6.17 | 6.00 |
| 22-230-50-04 | 230 | பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் பராமரிப்பு – பழுது பார்த்தல் | - | 1.00 | - | 1.00 |
| 24-230-50-07 | 230 | தெரு விளக்குகள் பராமரிப்பு – பழுது பார்த்தல் | 3.94 | 6.00 | 4.91 | 6.00 |
| 24-230-50-07 - 1 | 230 | தெரு விளக்குகள் பராமரிப்பு – பழுது பார்த்தல் – திறன்மிகு நகரம் | 0.52 | 0.50 | 1.49 | 1.00 |
| 61-230-51-01 | 230 | பூங்காக்கள் / நீச்சல் குளம் / பராமரிப்பு | 1.20 | 4.00 | 1.67 | 5.00 |
| 62-230-51-02 | 230 | விளையாட்டு மைதானங்கள் – பராமரிப்பு | - | 0.50 | - | 1.00 |
| 55-230-51-06 | 230 | திருமண மண்டபம், சமுதாயக் கூடம் மற்றும் கலையரங்கம் – பராமரிப்பு | 0.11 | 1.00 | 0.47 | 1.00 |
| 35-230-51-08 | 230 | மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனை இதர செலவினங்கள் | 0.16 | 0.02 | 0.02 | 0.50 |
| 35-230-51-08 - 1 | 230 | சிறிய அளவிலான சிகிச்சையகம் | 0.09 | 0.05 | - | - |
| 35-230-51-08 - 2 | 230 | மருந்துகள் வாங்குதல் | 0.30 | 0.40 | 0.44 | 0.45 |
| 35-230-80-18 | 230 | நோயாளிகளுக்கான உணவுகள் | - | 0.02 | - | - |
